# உயிரின் மறுபக்கம்

## 1

ஒவ்வொரு உயிரும் இருவித தேகங்களால் ஆனது. ஒண்ணு திடரூபம். இன்னொண்ணு சூட்சும ரூபம். இதில் திடரூபம் இயங்க சூட்சும ரூபத்தின் ஒத்துழைப்பு தேவை. ஆனால் சூட்சும ரூபம் இயங்க திடரூபம் தேவையில்லை. இந்த சூட்சும ரூபத்தை கல்பயோக பயிற்சியால் உடம்பில் இருந்து பிரிக்கலாம். பிரித்து எடுத்து அமெரிக்காவை ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்து திரும்ப நமது உடலுக்குள்ளும் நுழைந்து கொள்ளலாம். விக்ரமாதித்தன் காலத்தில் இதில் வித்தகர்கள் பலர் இருந்தனர்.

'ரசிக ரஞ்சனி' வார இதழ் அலுவலகத்தில் எடிட்டோரியல் மீட்டிங் ஆரம்பமாகியிருந்தது. வட்டமேஜை. ஒன்பது நாற்காலிகள்! சப் எடிட்டர்கள் நான்கு பேர். ரிப்போர்ட்டர்கள் நான்குபேர். நடுவில் திவ்ய ஸ்வரூபத்தோடு எடிட்டர் வீரபாரதி வரும் வாரத்திற்கான முதல் தேவை பற்றித்தான் பேச்சு எழும்பியது. தலையங்கம் வழக்கம் போல எடிட்டர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கார்கிலுக்கு உதவுவதாக வேண்டுகோள் வைக்கவேண்டு டும் உம் அடுத்து...?

போய்க் கொண்டிருக்கும் ஒரு தொடர்கதை ரொம் அறுப்பதாக வந்திருக்கும் வாசகர் கருத்து பற்றி பேச்சு எழும்பியது.

“அந்த ரைட்டரை கூப்டு முடிச்சுக்க சொல்லுங்க” என்று அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார் எடிட்டர் வீரபாரதி.

அப்புறம் ஒரு பழம் பெரும் நடிகையின் பேட்டி அவ இப்போது சாப்பாட்டுக்கு படும் கஷ்டம் பற்றி லேசா ஆரம்பித்தார் ஒரு சப் எடிட்டர்.

“சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் ஜென்மங்களில் பல லட்சம் பேர் இருக்க நடிகைக்கு மட்டுமென்ன முக்கியத்துவம் தூக்கி உடப்பில் போடுங்க” என்றா பதிலுக்கு இன்னொரு சப் எடிட்டர். வீரபாரதியிடம் ஆமோதிப்புப் பார்வை.

வீரப்பன் பற்றி பேச்சே இல்லையே என்றார் ஒருவர். என்ன செய்யலாம்...? காட்டுக்குப் போய் நலம் விசாரிச்சு வந்து ஒரு நாலுவாரம் பரபரப்போடு எதையாவது எழுதலாமா என்று கேட்டார் இன்னொருவர்.

நடுவில் எதுவும் பேசாமல் உம்மென்றிருந்தான் ஸ்ரீநாத் பிரதம துணை ஆசிரியர். வீரபாரதிக்கு பிறகு அவர்தான் அந்த சீட்டுக்கு என்பது நேற்று வரை நிலவிய நிஜம். இன்று அதை அசைத்துப் பார்க்க ஒருவன் வந்துவிட்டான். அதுவும் வேறு ஒரு பத்திரிகையிலிருந்து பெயர் ஜான்சன்.

ஆச்சரியம் ஜான்சன்கூட பேசாமல் உட்கார்ந்திருந்தான். வீரபாரதி கவனித்துவிட்டு கேட்டார்.

“என்ன ஜான்சன் உங்க ஸ்பெஷல் சஜெஷன் ஏதாவது உண்டா?”



“எல்லாரும் பேசி முடிக்கட்டும் சார்...” ஒற்றை வரியில் பதில்.

“ஸ்ரீநாத் நீங்க...?”

“நான் கார்கிலுக்கு நேரா போய் வந்து உணர்ச்சி பூர்வமா ஒரு கட்டுரை எழுதலாம்னு நினைக்கறேன் சார்...”

“நல்ல ஐடியா... வேற...?”

“சர்க்குலேஷன் ட்ராப் ஆறத பத்தி கொஞ்சம் யோசிக்கணும் சார்.”

“என்ன காரணம்னு நினைக்கறீங்க?”

“படிக்கறவங்கள்லாம் பாக்கறவங்களா மாறிக்கிட்டு வராங்க சார். ஐ மீன்... டி.வி. நம்ம வாசகனை தன் வசப்படுத்திகிட்டு வருது. அதுல இருந்து வாசகனை மீட்கணும்.”

“எப்படி?”

“அந்த மீடியால பாக்க முடியாத ஒண்ணை, அந்த மீடியா மூலமா கிடைக்க முடியாத ஒண்ணை நாம பண்ணனும்?”

“அதுதான் என்ன?”

“த்ரில்லா... இன்ட்ரஸ்டிங்கா எதாவது?”

“என்ன எதாவது அட்வென்சர் சமாசாரமா...”

“அது கூட கொஞ்சம் பழசு. அதத் தாண்டி புதுசா ஒண்ணு...”

“என்னன்னு சொல்லுங்களேன்...”

“நம்ம புத்தகம் வாங்கற வாசகனுக்கு அவனோட பிரச்சினை ஒண்ணை தீர்த்து வைக்கறதுன்னு...”

-ஒரு சப் எடிட்டர் சொன்ன மறுநொடி க்ளுக்கென்று சிரிப்பு வந்துவிட்டது ஜான்சனுக்கு. சொன்னவருக்கும் மூக்கில் குத்து வாங்கியதுபோல ஒரு வேதனை.

“ஜான்சன் சிரிச்சதுக்கு காரணம்?”-வீரபாரதி நறுக்கினார்.

“பின்ன என்ன சார்... வாசகனோட பிரச்சினைகள் எப்படிப்பட்டதுன்னு தெரியாம தீர்த்து வைக்கறோம்னா எப்படி? ஒருத்தன் வந்து எம்பொண்டாட்டி இன்னொருத் தனோட ஓடிட்டான்னுவான், இன்னொருத்தன் எனக்கு பத்துலட்ச ரூபா கடன்னுவான்...”

“யூ ஆல் ரைட்... எப்படிப்பட்ட பிரச்சினைகளை தீக்கறதுன்னு ஒரு வரைமுறை வேணும்...”

“நாம யாரோட பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியாது சார். நமக்கே ஆயிரம் பிரச்சினை... அதை தீத்துக்க தானே இந்த மீட்டிங்.”

“நோ... நாம ஒரு மீடியாவுல இருக்கோம். நம்ம சக்தி நமக்குத்தெரியணும் முதல்ல. நாம மனசு வெச்சா என்னென்னவோ பண்ணலாம்.”

“என்னென்னவோன்னா அதான் என்ன?”-ஜான்சன் சூடாக ஆரம்பித்தான். ஜான்சன் பேசுவதைப் பார்த்தால் தனக்குத்தான் எல்லாம் தெரியும். தன்னால் மட்டுமே சரியாக யோசிக்க முடியும் என்பது போன்ற ஒரு ஆங்காரம் தெரிந்தது. அது ஸ்ரீநாத்தை சற்று உறுத்தியது.

“மிஸ்டர் ஜான்சன்... முதல்ல கொஞ்சம் சிரிக்காம கேலிஃபீல் இல்லாம பேசுங்க. இந்த கருத்தை சொன்ன சப் எடிட்டர் ரங்கசாமிக்கு இந்த துறைல இருபது வருஷ அனுபவம் இருக்கு. உங்களப்போல பத்திரிகைக்கு தாவி வந்த கேஸ் இல்ல அவர்...”



“அப்படிப்போடு! மத்த சப் எடிட்டர்களிடம் சற்று தெம்பு பரவியது. வீரபாரதி விட்டுப் பிடித்தார். பத்திரிகையாளர்களிடம் இந்தப் போட்டி பொறாமை அவசியம். என்ன... சற்று வரம்பு மீறாமல் மனம் காயப்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஜான்சன் இப்பொழுது சீட்டை விட்டு எழுந்து நின்றான். உரக்கப் பேச ஆரம்பித்தான்.

“நான் நிறைய பத்திரிகை தாவினவன்தான், காரணம் வளரணும்கற ஆசை. வளத்துக்கணும்கற தாகம். அதுக்கு இடமில்லாத இடத்துல என்னால செயல்படமுடியாது. இந்த இடமும் அப்படின்னா நான் இப்பவே கிளம்பறேன்.”

-தெரியும்... அவன் அப்படிப் பேசுவான் என்று... வீரபாரதி அவனைப் பார்த்து உட்காரச் சொன்னார்.

“உக்காருங்க ஜான்சன். நீங்க இங்க வளர ஒரு தடையும் இல்ல. கோபப்படாம என்ன செய்யலாம்னு அதைச் சொல்லுங்க...”

“ஏன் இல்ல... நான் ஒரு வழி சொல்றேன். ஸ்வாமி சக்கரவர்த்தி பரந்தாமன்னு ஒருத்தர் உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். மிகப் பெரிய மேதை. இந்த இந்தியாவுல அவர் இருக்கும்போதே ஜப்பான்லேயும், அமெரிக்காலேயும் உள்ள நண்பர்கள் எதிரிலேயும் தோன்ற முடிஞ்சவர். ஒரு மனிதனைப் பார்த்த மாத்திரத்தில் அவனைப்பத்தி பிட்டுப் பிட்டு வைக்கவும் கூடியவர்.

நம்ம வாசகர்கள் பிரச்சினைகளுக்கு இறந்துபோன மனிதர்களின் ஆத்மாக்களின் துணையோட பதில் தருவார் அதனால் அவங்க பிரச்சினைகள் தீரும்.”-ஸ்ரீநாத் சொல்லவும் ஜான்சனிடம் திரும்பவும் சிரிப்பு. அது ஸ்ரீநாத்தை கீறியது.

"சிரிக்காதீங்க ஜான்சன். நான் சக்கரவர்த்தி பரந்தாமனைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன். அ... ஒரு அபூர்வ மனிதர்.''

'அப்படின்னு உங்களை சொல்லச் சொன்னாராக்கும்...

"நான்சென்ஸ்... என்ன பேசறீங்க...?''

"பின்ன ஒரு பத்திரிகையாளரா இருந்துகிட்டு ஆ... பூதங்களை நம்பறவரைப் பத்தி பேசினா சிரிப்பு வராதா...

"பத்திரிகையாளனுக்கு என்ன கொம்பா முளைச்சிருக்கு... அவனும் பிரச்சினைகள் உள்ள மனிதன்தான். ஞாபக... இருக்கட்டும்.''

"பிரச்சினை எல்லாருக்கும் இருக்கு. பத்திரிகை... யாளனுக்கு கூடவே இருக்கு. நான் அதை மறுக்க... அதுக்காக கொஞ்சம் கூட சென்ஸ் இல்லாம பே... கூடாது...''

"எது சென்ஸ் இல்ல? இந்த ஆவி பூதம் மனுஷங்களு... வக்காலத்து வாங்கிப் பேசறதா?''

"உண்மை யார்கிட்ட இருந்தாலும் நாம வக்காலத்து... வாங்கலாம் தப்பில்லை?''

"எது உண்மை?''

"சக்கரவர்த்தி பரந்தாமன் சொல்ற செய்யற எல்லாம்...''

"எதைவெச்சுன்னு சொல்ல முடியுமா... ஐ மீ... புரூஃப்...?''

"என் சுய அனுபவங்கள்...''

"என்ன அது?''

"என்ககு ஒரு சின்ன ஆக்சிடென்ட் ஆகும்னார். ஆனது... எனக்கு பெண் குழந்தைதான் பிறக்கும்னார். பிறந்தது... எவ்வளவோ சொல்லலாம்...'' திரும்பவும் சிரித்தான்



ஜான்சன். திரும்பவும் வலித்தது ஸ்ரீநாத்துக்கு. இடையில் எழுந்தார் வீரபாரதி.

"ஓ. கே... உங்க பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி. மிஸ்டர் ஜான்சன் நீங்களோ இதை நம்பாதவர். அவரோ நம்பறவர். ஆகையால நம்பாத நீங்கள் ஏன் அந்த சக்கரவர்த்தி பரந்தாமனைப் போய் பார்த்து அவர் விஷயங்களை பொய்யின்னு சாதிக்க முயலக் கூடாது...''

"குட் ஐடியா சார். நான் ரெடி.''-ஜான்சன் தூசு தட்டிக் கொண்டு நிமிர்ந்தான்.

"போங்க... போனாதான் தெரியும். அதிகப் பிரசங்கித் தனமா நடந்து அவர் கோபத்துக்கு மட்டும் ஆளாகிடாதீங்க. அப்புறம் அவ்வளவுதான்...'' ஸ்ரீநாத்தின் எச்சரிக்கை ரோஷத்தை வரவழைத்தது ஜான்சனுக்கு,

"உங்க சக்கரவர்த்தி பரந்தாமன் ஒரு சராசரி மனுஷர் வெறும் பொய்ச் சாமர்த்தியங்கள் உடையவர்ங்கறத புரூஃப்பண்ணி உங்களைப் போல அவர் மேல நம்பிக்கை வெச்சு ஏமாந்துகிட்டிருக்கற பல லட்சம் பேர்களை நான் திருத்தலேன்னா நான் ஜான்சன் இல்ல...''

-ஜான்சனும் முண்டா தட்டினான். இடையில் ஒசைப்படாமல் ஒரு அதிர் வேட்டைத் தூக்கிப் போட்டார் வீரபாரதி.

"எனக்கு ரிடையர் ஆக இன்னும் ஆறுமாசம் தான் இருக்கு. இந்த அசைன்மென்ட்ல ஜெயிக்கற நபருக்குதான் அடுத்த ஆசிரியர் பதவி!''

## 2

'அமாவாசை... சூரிய ஒளிப்புனலின் கதிர் பிரபஞ்ச வெளியில் நிலவில் பதியாத தினம்.

இதன் இரவுக் காலம் சூட்சும சரீரங்கள் வெளிப்பட உகந்த காலம். கீழ் நோக்கிவரும் அவர்களின் பசியினைத் தீருங்கள். ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்'

அலையடிக்கக் கிடந்தது சமுத்திரம்.

கரையில் நாணல் பூக்கள் - நண்டு விளையாட்டு. கூடவே சக்கரவர்த்தி பரந்தாமனின் திருப்பாதங்களும்.

சற்று தள்ளி மண்வெளிமேல் அவரது டாடா ஜென் உஜாலா வெள்ளையில் டாலடித்தபடி...

கடலையே பார்த்தபடி நிற்கும் சக்கரவர்த்தி பரந்தாமனின் இடது ஜிப்பாவில் செல்போன் சிணுங்கியது.

எடுத்துக் காதைக் கொடுத்தபோது வீரபாரதி தான் பேசினார்.

''வணக்கம் நான் ரசிக ரஞ்சனி எடிட்டர் பேசறேன்...''

''சொல்லுங்க... ஜான்சன்கறவர் என்னை ஆராய வரப்போறாராக்கும்?''

''உங்களுக்கு எப்படி இவ்வளவு சீக்கிரமா...?''

''இப்ப பேசிகிட்டிருக்கற இந்த நிமிஷத்துல உங்க எதிரே டீ கப்புல டீ ஆறிக்கிட்டும் இருக்கணும் சரிதானா?''

''அது... அது... சரிதான். யாராவது கொஞ்சம் முந்தி சொன்னாங்களா?''

''சந்தேகமா... சரி இன்னொண்ணு சொல்றேன். உங்கபேத்திகள்ல ஒருத்தி இன்னிக்கு வயசுக்கு வந்துடுவா. அப்புறமா மிச்சத்த யோசிக்கலாம். நீங்க ஜான்சனை அனுப்பிவைங்க.''

-சக்கரவர்த்தி பரந்தாமன் செல்ஃபோனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.



இருநூறு முன்னூறு அடித்தூரத்தில் பக்தர் கூட்டம் நெருக்கியடித்தபடி... தொண்டர்கள் குழுவும் போலீஸாரும் அடக்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் கழுத்தில் கேமராவுடன் ஜான்சனும் ஒருவனாக... தன் ஐடென்டி கார்டை ஒரு போலீசிடம் காட்டி சக்கரவர்த்தி பரந்தாமனை பார்க்க அனுமதி கேட்டுக் கொண்டிருந்தான். அவர் இப்பொழுது முடியாது என்கிற மாதிரி மறுத்துக் கொண்டிருந்தார். அவர் எதிரிலேயே தன் வசம் உள்ள செல்போனால் அவரைக் கூப்பிட்டான். அலை அவரது கால்களை மோதி மோதிக் கழுவிக் கொண்டிருந்தது.

''யெஸ் ஜான்சன்...''-அவர் மிக வியப்பளித்தார்.

''சார் நான்தான்னு எப்படி உங்களுக்கு...?''

''இதென்ன கேள்வி மிஸ்டர் ஜான்சன். நீங்க வாங்க. இந்த நிமிஷம் நீங்கதான் என்னோட நிழல். நிழலே வருக பேசியபடி திரும்பி ஜான்சனை நோக்கி நடந்துவர ஆரம்பித்தார்.

பக்தர்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது.

''ஸ்வாமி... கடவுளே... சாமி...'' விதவிதமான விளிப்புகள். காலில் விழல்கள் கன்னத்தில் போட்டுக் கொள்ளல்கள். அவர்களில் ஜான்சன் அவரை நோக்கி கேமராவும் கையுமாக முன்னேறத் தொடங்கினான்.

தடுக்கப் பார்த்தவர்களை ச.ப. வின் கரங்கள் சைகை காட்டியே விலக்கி விட்டது.

இருவரும் மணல் வெளிக்கரைமேல் ஒரு இடத்தில் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு நல்ல கொக்கு பறக்கும் தாடி. அதன்

நுனியைப் பிடித்து முடிச்சு போட்டபடியே பேசுவது ச.ப.வுக்கு மேனரிசம்.

அது நடந்தது.

ஜான்சன் குட்மார்னிங் சொன்னான். சாதாரணமாக எல்லாரும் பார்த்த மாத்திரத்தில் ஆனந்தக் கண்ணீர் விடுவார்கள். மரம் மாதிரி காலில் விழுவார்கள். பூர்வ ஜென்ம புண்ணியம் உங்களை தரிசித்தது என்று சொல்லி பரவசப்படுவார்கள்.

ஜான்சனிடம் இந்தக் கூத்து எதுவுமில்லை.

ஆனாலும் அவனைத் தொட்டு ஆசீர்வதித்தார் ச.ப!

''நல்லா இருப்பே ஜான்சன் நீ...'' என்றார்.

''எனக்கும் அதுல சந்தேகமில்ல சார். நல்ல பத்திரிகை நல்ல உத்யோகம், நல்ல சம்பளம், நானும் கடின உழைப்பாளி நல்லா இருந்துதானே தீரணும்?''

-அவன் பேச்சில் தொனிப்பது இறுமாப்பா தன்னம்பிக்கையா, இல்லை இரண்டும் கலந்த கலவையா என்பது தெரியவில்லை.

ச.ப. பார்வை அவன் பேச்சை மிக ரசித்தது.

''சரி போகலாமா?'' கேட்டார். அவன் ஆமோதிக்க கிளம்பினார்கள். சுற்றி நிற்பவர்கள். ஆர்ப்பரித்தார்கள். ஸ்வாமி என்றார்கள்.

காருக்குள் ஏ.சி. ஜான்சனை சற்று யோசிக்க வைத்தது. உள்கூட்டிலும் ஏக அலங்காரங்கள். குஷன் இருக்கை போதாதென்று வெல்வெட் தலையணைத் திண்டுகள் வேறு. ஃப்ளாஸ்கில் காபி, டீ, ஹார்லிக்ஸ் என்று வகைக்கு ஒன்று.



கார் ஓடும் போது ஓடுவதே தெரியவில்லை. அந்த அளவுக்கு ஷாக் அப்சார்பர்கள் பொருத்தப்பட்டது போல ஒரு தொட்டில் தன்மை.

''என்ன சாப்பிட்றே?''-ச.ப ஜான்சனை உபசரிக்க ஆரம்பித்தார்.

''ஒண்ணும் வேண்டாம் சார். அசைன்மெண்ட் சம்பந்தமா டூட்டில இருக்கறப்போ யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக்கறதில்லை சார் நான்.''

''நல்ல பாலிசி...''-என்றார் ச.ப. ஆனால் முகம் போன போக்கில் வழிசல். ஜான்சன் அதை கவனித்தான். மனதில் குறித்தும் கொண்டான்.

''சரி என்வரைல உன் அசைன்மெண்ட் என்ன?''

''சராசரி மனிதர்கள்ல இருந்து நீங்க எவ்வளவு மாறுபட்டவர்ங்கறத விஞ்ஞானபூர்வமாக தெரிஞ்சுக்க விரும்பறேன்.''

''தெரிஞ்சு...?''

''அதை எழுதுவேன்.''

''எழுதி?''

''எழுதி எல்லார்க்கும் உங்க சக்தியை தெரியவைப்பேன்!''

''நான் தான் என் சக்தியை எல்லார்க்கும் தெரிவிச்சபடி இருக்கேனே... நீ வேற சேரணுமா?''

''இருந்தாலும் உங்க சக்தி எப்படிப்பட்டதுன்னு யாருக்கும் தெரியாதே?''

''அது தெய்விகமானது. அதுதான் இந்த உலகத்திலேயே உயர்ந்தது. இன்னும் சொல்லப்போனா அது வேற நான் வேற இல்ல...?''

"அப்ப நீங்கதான் கடவுளா?"

"இதை நான் பல ஆயிரம் தடவை கூறியிருக்கேன். இப்பவும் சொல்றேன் இப்பகூட நீ, என்னை எப்படி பார்க்க விரும்பறியோ அப்படி பார்க்கலாம்." ஜான்சனுக்கு அந்த பதில் ஆச்சரியமளித்தது. மனதில் அவன் எப்பொழுதாவது சர்ச்சுக்கு போகும் போது பார்க்கும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை சுமந்த பிம்பம் ஞாபகத்தில் மின்னியது.

அடுத்த நொடியே பக்கத்தில் அமர்ந்திருந்த சக்கரவர்த்தி பரந்தாமன் அது மாதிரி ஒருசில விநாடிகள் தோன்றிப் பின் இயல்பான மனிதரானார்.

ஜான்சனுக்கு வியர்த்து விட்டது!

"என்ன பார்த்தியா...?"

"பா... பார்த்தேன்."

"இனியாவது நம்பறியா?"

-அந்தக் கேள்விக்கு பதில் கூற முடியாமல் அவன் அவரையே பார்த்தான்.

அவர் தாடி முடி போட்டபடி சிரித்தார்.

சட்டென்று அவனுக்குள் ஒரு சின்ன விழிப்புணர்ச்சி. உள்குரல் 'இது கண் கட்டு வித்தை' என்றது.

"என்ன கண்கட்டுன்னு நினைக்கறியா?"-ச.ப. அவன் நினைவையே கேள்வியாக்கி மடக்கினார்.

அவனிடம் மேலும் திணறல். கார் போய்க்கொண்டே இருந்தது.

அவனிடம் அமைதி.



"என்ன ஜான்சன்...பேசு."-ச.ப அவனைத் தூண்டினார். உன்மத்தமாகச் சிரித்தார். ஒரு சில காட்சிக்கே இந்த அளவிற்கு சுருண்டு விட்டாயே என்கிற மாதிரி...

இருந்தும் ஜான்சன் தன் திணறலில் இருந்து மீண்டான்.

"சார்..."

"சொல்லு."

"நீங்க கடவுள்னா இந்த உலகத்து அக்ரமங்களை வேடிக்கை பார்க்கலாமா?"

"எது அக்ரமம்?"

"இப்போ கார்கில்ல நடக்கற யுத்தம்."

"அதை நான் வேடிக்கை எங்கே பாக்கறேன்."

"அதை தடுக்க, இல்ல அதுல நாம ஜெயிக்க என்ன செய்திருக்கீங்க?"

"எவ்வளவோ?"

"அது என்னன்னு..."

"பட்டியல் போடச் சொல்றியா?"

"ஆமாம்."

"இந்த யுத்தமே ஏற்படாம தடுத்திருக்க முடியும் என்னால... ஆனா ஏற்பட்றது நல்லதுன்னு தான் தடுக்கல."-ஆச்சரியமான பதில் ச.ப.'விடம்.

"எப்படி?"

"இப்ப பார்... எல்லாரும் கார்கில் கார்கில்னு அதை பத்தியே சிந்திக்கிறாங்க. தேசிய உணர்வு சின்னவங்கள்ல இருந்து பெரியவங்கவரை பரவி இருக்கு. இந்த யுத்தம் மட்டும் நடக்கலேன்னா இளைய சமுதாயத்துக்கு யுத்தம்னா என்ன, சமாதானம்னா என்னன்னே தெரியாம

போயிருக்கும். 1971க்கு பிறகு எந்த யுத்த... நடக்கலையே...? அப்ப ஜெய் பங்களாதேஷ்ங்கற வார்த்... ரொம்ப பிரசித்தம்.''

''அப்ப தெரிஞ்சு தான் விட்டு வெச்சுருக்கீங்களா?''

''ஆமாம்.''

''சரி யுத்தத்துக்கு இப்படி பதில் சொல்லிட்டீங்க... வறுமை கடன் இதுக்கெல்லாம்...?''

''இதெல்லாம் இந்த தேசத்தோடு வினைப்பாடு, இதை... சரி செய்ய எனக்கே அதிகாரம் கிடையாது.''

''தேசத்துக்கு இப்படி ஒரு பதில் தனிமனிதனா... எனக்கு?''

''யாரா இருந்தாலும் விதியையும் வினையையும் நா... மாற்ற முயற்சிக்க மாட்டேன்.''

''அப்ப உங்களை வணங்கறவங்களுக்கு நீங்க தரு... வரம்.''

''ஆசிகள்.''

''அது இருந்தா போதுமா...?''

''நிச்சயமா என் ஆசி உள்ள ஒருவன் மிகப் பெரி... பலவான்.''

''எந்த வகைல...''

''எல்லா வகையிலையும்...''

'இப்படி சாமர்த்தியமா பதில் சொன்னா எப்படி... மெடீரியலிஸ்டிக்கா சொன்னா புரியும்.''

''அப்படியா... நீ என்னை நம்பு வணங்கு துதி செய். என்... புகழைப் பரப்பு அதன் பிறகு நான் உனக்கு வரம் தரே... அப்ப தெரியும் அதோட சக்தி.''



''ஆகக் கூடி உங்களுக்கு துதி செய்தா தான் நல்லது நடக்கும். இல்லேன்னா அவஸ்தைதான்.''

''அது உன் வினைப்பாட்டை பொறுத்த விஷயம்.''

''உங்களுக்கு எதிரா பேசறவங்கள பத்தி...''

''அவர்கள் பாவம் அவர்களை அப்படி பேசவைத்து மேலும் பாவியாக்குகிறது.''

''அப்ப உங்களை மதிச்சு பக்தி செய்யறவங்க புண்ணியம் செய்யறவங்களா?''

''புண்ணியம் செய்தவங்களும் கூட...''

''அப்ப அவங்களுக்கு நீங்க என்ன தந்தீங்க...?''

''அவங்க பக்தியைப் பொறுத்து அவங்க சிக்கலை நான் தீர்த்து வைக்கறேன்.''

''எல்லாத்துலையுமே அப்ப அளவுகளோட தான் செயல்படுவீங்களா?''

''நிச்சயமா... அளவற்ற எதுவுமே ஆபத்தானது.''

''2000த்துல உலகம் அழியுமா?''

''நான் அழிய விட மாட்டேன்...''

''எங்க பத்திரிகை வாசகர்களோட சிக்கல்களுக்கு விடை காண உதவுவீங்களா?''

''நிச்சயமா... ஆனா ஒரு கண்டிஷன்.''

''என்ன?''

''ஒரு வாரத்துக்கு ஒருவருக்குத்தான் உதவுவேன்.''

''இது என்ன கணக்கு?''

''கணக்குதான். எல்லோர்க்கும் கருணை காட்ட விதியில இடம் இருக்கணும்.''

"ஒருத்தருக்கு மட்டும் கருணை காட்ட இடமிருக்கா?"

"இருக்கு... எத்தனை ஆயிரம் பேர் பிரச்சினைகளை சொல்லியிருந்தாலும் ஒருத்தர் மட்டும் என்னால தே செய்யப்படுவார். அவர் நிச்சயம் என் பக்தரா தா இருப்பார்."

சலிக்காமல் சளைக்காமல் அவனும் கேட்டான். பவும் பதில் சொன்னார். எப்படியோ ஒரு பிரச்சினையை தீர்த்து வைப்பதாகக் கூறிவிட்டார். அ ஒருவர் பிரச்சினையை வைத்தே இந்த ஆ லட்சணங்களை எடை போட்டு விடுவது என்றும் அவ தீர்மானித்தான்.

அவன் நினைப்பதை உணர்ந்து ச.ப.வும் சிரித்தார்.

"உன் அடிமனசு என்னைக் கொஞ்சம் கூட நம்பல. எ சக்திகள் மேல சந்தேகமும் கூட உனக்கு... அதனா என்னை எப்படி மடக்கலாம்னே யோசிக்கறே... இல்ல?"

மிக நேரிடையான அந்தக் கேள்வி ஜான்சனை நிை அடித்தது இல்லை என்று கூறவும் பத்திரிகையாளர் நேர இடம் தரவில்லை. ஆமோதிப்பாக அவரைப் பார்த்து சிரித்தான்.

"என்னை யாராலையும் எதுவும் செய்ய முடியாது. எ இந்த உயிரும் கூட இன்னும் நூறு வருஷம் இந்த பூமியி வாசம் செய்யற பலத்தை உடையது."

ச.ப. தொடர்ந்தார்.

"அதுக்கு பிறகு?"

"நான் திரும்ப பிறப்பேன். எட்டு வயதுலேயே அ என்னை இந்த உலகம் கடவுள்னு சொல்லும். சொல்லவு வைப்பேன்."



"அப்ப அந்த இடைப்பட்ட எட்டு வருடங்கள் கடவுள் இல்லாத பீரியடா?"

-கேலியாக ஆனால் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான் ஜான்சன்.

ச.ப'வும் அவனை யோசனையோடு பார்த்தார். சட்டென்று கண்களை மூடி முகத்தை கோணல்மாணலாக் கினார். பின் பளாரென கண்மலர்ந்திட உன் பிறந்த தேதி எட்டா என்று கேட்டார். பதிலுக்கு ஆச்சரியம் விரிந்தது ஜான்சனிடம்.

"ஆமாம்" என்றான்.

"மாதம் பதினொன்ணா?"

"ஆமா"-அதிகபட்ச ஆச்சரியத்துடன்.

"வருடம் ஐம்பத்து● எட்டு...?"

"ரொம்ப சரி..."

"உன் பிறந்த தேதி சொன்ன நான் உன் மரண தேதிய சொல்லட்டுமா?"-ஒரு தடாலடி கேள்வி கேட்டார். ஜான்சன் ஆமோதிப்பாய் தலையை அசைத்தான். ஆனால் ச.ப' சட்டென்று சொல்லிவிடவில்லை. அவனையே ஊன்றிப் பார்த்தார்.

"இப்படிப் பார்த்தா எப்படி? சொல்லுங்க..."

"சொல்றேன். சொன்ன நம்பமாட்டியே... எதை சொன்னாலும் நம்பாம ஆராயறதுதானே உன் புத்தி."

"இல்லையே... என் பர்த்டேட்டை சரியா சொன்னீங்களே. ஒத்துக்கத்தானே செஞ்சேன்."

"எப்படின்னு கேக்கலியே...?"

"கேக்கமாட்டேன். ஏன்னா அதை தெரிஞ்சு வெச்சுக்கிட்டு சொல்றது ஒண்ணும் பிரமாதமில்லை. என் ஐடென்டி கார்டுலையே அது இருக்கு. ஒரு நாளைக்கு தினம் நூறு பேருக்கு காட்றேன்..."

"அப்படியா?"-ச.ப' கேட்கும் விதமே மிகவும் எக்காளமாக இருந்தது. இவன் எமகாதகன். இவனை வழிக்குகொண்டு வருவதும் மிகக் கடினம் என்பதுபோல உணர்வுகள் உள்ளோடியதோ என்னவோ... வழக்கம் போல தாடியை நீவி முடிபோட்டார். பின் சிரித்தபடியே சொன்னார்.

"உன் மரணம் நாளைக்கு மதியம் சரியா ஒருமணிக்கு மகனே!"

அவனுக்கு குப்பென்று வியர்த்து விட்டது. இருந்தும் சட்டென்று கேட்டான்.

"என்ன என்னை கொலை பண்ணப் போறீங்களா,"

"நான் எதுக்கு பண்ணணும் எமன் இருக்கும் போது!"-சொன்னபடியே டிரைவருக்கு சமிக்ஞை தந்திட ஓரம் கட்டி நின்றது.

"இறங்கு ஜான்சன். போ... போய் உன் மனைவி மக்களோட பொழுதை சந்தோஷமா செலவழி. இந்த உலகத்துல தன் மரண நிமிடம் தெரிஞ்சு சாகறவங்களை விரல்விட்டு எண்ணிடலாம். நீ அவங்கள்ல ஒருத்தன். நீ செய்த புண்ணியம்தான் என்னை சந்திச்சே. என் தரிசனமும் உன் விருப்பப்படியே நிகழ்ந்தது. உன் மரணமும் அந்த விதிப்படியே நடந்தே தீரும். போ... உன் ஆசிரியரை சந்திச்சு நடந்ததைச் சொல்லி நேரத்தை விரயம் செய்யாதே. அதே போல மரணத்திலிருந்து தப்பிச்சுக்கலாம்னு நம்பி எங்கேயும் போய் ஒளியாதே. எல்லாமே கால விரயம். நேர விரயம். உனக்கு இனிமேலான ஒவ்வொரு வினாடியும் உன்னதமான வினாடிகள். போ... போய் அந்த நேரத்துல சந்தோஷமா இரு..."

-அவனை இறக்கிவிட்டு அந்தக் கார் சிட்டாக பறந்தது. நடுச்சாலையில் திக்பிரமை பிடித்த நிலையில் ஜான்சன். இந்த விஷயத்தை, சம்பவத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்றே பிடிபடாத குழப்பத்தில் நடுச்சாலையில் நிற்கிறான் ஜான்சன்!

# 3

'கால்ப்ரகாஹிகா' ஓர் அற்புதமான ஜோதிட நூல். இதனை குருவோட சேர்ந்து படிக்கத் தெரியவேண்டும். வரிக்கு வரி இதன் பொருள் அர்த்தங்களை மாற்றிக் காட்டும். ஆனாலும் அவ்வளவும் கால ரகசியம். இதை வாசிக்கத் தெரிந்தவன் ஒருவனின் மரண விநாடிகளை புள்ளியிட்டுக் கூறிவிட முடியும்.'

**தொ**லைபேசி அலறியது.

கையில் எடுத்து காதைக் கொடுத்தார் எடிட்டர் வீரபாரதி.

"சார்... நான் ஜான்சன் பேசறேன்."

"சொல்லு... எப்படி போயிட்டிருக்கு?"

"என்னத்த... நாளைக்கு ஒரு மணிக்கு என் விதி முடிய போகுதாம்.

அந்த பெரிய மனுஷன் சொல்லிவிட்டு என்னை நடுவழில இறக்கி விட்டுட்டார்..."

“அவர் கோபப்படும்படி ஏதாவது பேசினியா... கேள்வி கேட்டியா”

“சத்யமா, இல்ல. ஆனா, மனசுல ஒட்றதை அந்த ஆள் என்னமோ டி.வி ஸ்க்ரீன்ல படிக்கற மாதிரி படிக்கறான்”

“சரி நீ நேர்லவா...” வீரபாரதி பேச்சை நறுக்கென்று முடித்துக்கொண்டார்.

பத்திரிகை அலுவலகம்.

உள்ளே நுழையும் ஜான்சனை முதலில் ஆச்சரியமாக பார்ப்பது ஸ்ரீநாத்தான்.

“என்ன ஜான்சன்... என்ன ஓடிவந்துட்டீங்க” கேள்வியே குத்தியது.

நின்று ஒரு சின்ன முறைப்பு-பதில் தர உதடுகள் பிரியப்படவில்லை. நேரே நடக்கிறான்.

எதிரில் சீட்டில் வீரபாரதி.

“வா உட்கார்... என்ன நடந்தது...”

-ஜான்சனும் சொல்லத் தொடங்கினான்.

கடற்கரையில் போலீஸிடம் ஆரம்பித்து நடச்சாலையில் இறங்கி நின்ற வரை.

வீரபாரதி பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே யோசனை செய்யத் தொடங்கினார்.

நடுவில் ‘எக்ஸ்யூஸ்மி...’ என்றபடியே ஸ்ரீநாத்தின் பிரவேசம்.

“வா ஸ்ரீநாத்... உக்காரு...”

“என்ன சார் ஆச்சு?”

“சொல்றேன். அந்த ஆள் சரியான மேஜிக் நிபுணனா இருப்பானோ?”



-வீரபாரதி ஜான்சனைப் பார்த்தபடியே கேட்டார்.

“தெரியல சார். ஆனா சில விஷயங்களை நம்பமுடியல. பர்டிகுலரா அந்த சில நொடிகள் நான் செய்த ஜீசஸ் க்ரைஸ்ட் தரிசனம்.”

“பயங்கர த்ரில்லா இருக்கே ஜான்சன். இப்படி ஒரு சுப்ரீம்பவர் உள்ள மனுஷன் ஐமீன் கடவுள் இங்கிருந்தா இந்த தேசமே சுபிட்சமா இருக்கணுமே...?”

நானும் அதைபத்தி வளைச்சு கேட்டுப்பாத்துட்டேன் சார். அவ்வளவுக்கும் ரொம்ப சாமர்த்யமான பதில் வினையையோ விதியையோ நான் மாத்த மாட்டேன். என்னை நம்பறவங்களை கைவிடவும் மாட்டேன்னு பயங்கர சாமர்த்யத்தோட பதில்...”

“மொத்தத்துல அவரை உங்களால புரிஞ்சுக்க முடியல ஒத்துக்குங்க.”

-ஸ்ரீநாத்தின் இடையீடு வீரபாரதியையே நறுக்கியது.

“ஸ்ரீநாத்... என்ன பேச்சு இது. இந்த பேச்சு எதுக்குன்னு நினைக்கறே? இந்த மாதிரி மனுஷங்கள புரிஞ்சுக்கத்தான்.”

“அதான் முடியலயே. குருடன் யானையைத் தொட்டுப் பார்த்து ஃபீல் பண்ற மாதிரியில்ல இருக்கு உங்க செயல்.”

“அதுக்காக நம்பி சரண்டராயிடச் சொல்றியா?”

“என்ன சார் பைத்தியக்காரத்தனம் இது. ஒரு சுப்ரீம் பவரை மேதையை கடவுளுக்கு சமமானவரை நம்பினா என்ன தப்புங்கறேன்.”

“நோ... இதெல்லாம் இம்பாசிபள். இதுல ஏதோ சூது இருக்கு.”

“ஆமாம் சார்... எல்லாத்தையும் ஆட்டிவைக்கறேன்னு சொல்றவருக்கு ஏசி கார் இல்லாம இருக்க முடியவில்லை.

ஹார்லிக்ஸ் டீ காபி தேவையா இருக்கு. செல்போ...
இல்லாம நம்மோட பேச முடியல."

-ஜான்சனும் யோசிக்கும்படியாகத்தான் கேட்கிறா...

"அப்ப இந்த டேலன்ட்லாம் எப்படி சாத்தியம்?"

"தெரியல... அதை தெரிஞ்சுக்கணும். விடக்கூடா... விடவே கூடாது. இந்த தேசத்துல ஒரு நாளைக்கு ஒ... சாமியார் முளைக்கறார். அவங்களுக்கும் கூட்டம் சே... எத்த தின்னா பித்தம் தெளியும்னு ஜனங்க அலைபாயு... உண்மை பொய்யை தெரிஞ்சுக்கவே முடியல." வீரபா... உதடு முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

"சார்... நம்மகிட்ட இருக்கறது அறிவுக் கர்வம். ஜோ... சாமியார்களும் இருக்காங்க. நான் இல்லேங்கல ச... அப்படி இல்லை. அவர் ஒரு அதிசயப் பிறவி. அவர் மூ... உலக அதிசயங்கள்ல ஒண்ணு... நம்புங்க..."

"நீ என்ன சொல்றே ஸ்ரீநாத். நம்ம ஜான்சன் நாளைக்கு ஒரு மணிக்கு செத்துப் போயிடுவானாம். நம்பறியா நீ"

-ஸ்ரீநாத்துக்கு ஒரு நொடி பக்கென்றது.

"அப்படியா சொன்னார்...?"

"நான் தமிழ்ல தானே சொல்றேன்..."

"சார் அப்ப அது நடந்துடும்..."

"பாக்கலாமா?"

"இது என்ன சவால். நான் நம்பிக்கைல சொல்றேன் மிஸ்டர் ஜான்சன். ஐ ஆம் வெரி சாரி. நான் ஏதாவது தப்பா பேசியிருந்தா மன்னிச்சுடுங்க... நீங்க உங்க கன... ஆசைகளை நிறைவேத்திக்க பாருங்க. காட்'ஸ் கிரேஸ் உங்க கைல பல மணிநேரங்கள் இருக்கு. போய் ப... லட்சங்களுக்கு நீங்க இன்ஷ்யூர் கூட பண்ணிக்கலாம்."



"போதும் நிறுத்துங்க ஸ்ரீநாத். நான் பல வருஷம் வாழப்போற ஒருத்தன். அந்த மனுஷன் என் மனசுல பீதியை மூட்டி அந்த பயத்துலேயே என்ன சாகடிக்க முடியும்னு நம்பிட்டான் போல...? இட்ஸ் இம்பாஸிபிள். நான் எப்பவும் போல இருப்பேன். போவேன். வருவேன். என்ன ஆயிடுதுன்னு பாக்கறேன்."

"என்ன ஜான்சன்... அவரை நேர்ல பார்த்து பல கேள்வி கேட்டு உங்க இஷ்ட தெய்வமா அவரைப் பார்த்ததும் நீங்க இப்படி நம்பாம பேசினா எப்படி?"

"ஷட் அப்... அண்ட் ஸ்டிச் ஆன்யுவர் டார்ட்டி மௌத். எல்லாமே ஏதோ தில்லு முல்லு. யெஸ் தில்லுமுல்லு. இதோட மூலத்தை நான் கண்டு பிடிக்காம விடமாட்டேன்."

-ஜான்சனும் ஸ்ரீநாத்தும் கட்டி உருளாத குறை. வீரபாரதி தீவிரமாக யோசித்தபடியே இருந்தார். பின் வாய் திறந்தார்.

"ஜான்சன் எதுக்கும் நீ எச்சரிக்கையா இருக்கறது நல்லது. வெளிய எங்கேயும் போகாதே. ஏன்னா அந்த ஆள் வாக்கு பலிச்சிடுச்சுன்னு இந்த உலகத்தை நம்பவைக்க யாரையாவது விட்டு கொலை செய்யவோ, இல்லை ஆக்ஸிடெண்ட் பண்ணவோ முயற்சி செய்யலாம்.

உனக்கு இந்த பத்திரிகை ஆபீஸ்தான் ரொம்ப பாதுகாப்பான இடம்.

உன் மனசு நாம செத்துட மாட்டோம்னு உறுதியா நம்புது இல்ல..."

"நூறு சதம் சார்... ஐ ஹேவ் நோ டௌட். ஐ ஹேவ் நோ பீயர். ஐ ஹேவ் நோ கன்ஃப்யூஷன்"

"குட்... அதுபோதும் இங்கேயே இரு. அந்தச் சக்கரவர்த்தி பரந்தாமனோட சுயரூபம் தெரிய இது ஒரு நல்ல சந்தர்ப்பம். ஒரு பத்திரிகையாளன் தன்னையே பணயம் வெச்சு செய்யப்போற ஒரு வேள்வி இது. பார்த்துடுவோம் ரெண்டுல ஒண்ணு. ஸ்ரீநாத் இதுபத்தி நீ மூச்சுவிடக் கூடாது. நம்ம வேலைகள் எப்பவும் போல நடக்கணும். எந்த பதற்றமும் இருக்கக் கூடாது.

நாம புத்தியையும், பகுத்தறிவையும் முதலா வெச்சு இந்த உலகத்தோட விஞ்ஞான தத்துவங்களுக்கு உட்பட்டு வாழற மனுஷங்க. நாம அதை மறந்துடக் கூடாது..."

-வீரபாரதி அழுத்தம், சிந்தனை, மெய், பொருள் அத்தனையும் காட்டினார் தன்பேச்சில்.

ஸ்ரீநாத் தவித்தான்.

"சார்... தவறா எடுத்துக்காதீங்க... நீங்க சொல்ற சிந்தனைகள் எனக்கு இல்லாம இல்லை. அதேசமயம் இந்த உலகம் எல்லாத்தையும் புரிஞ்சு வைச்சிருக்குன்னும் சொல்ல முடியாது. விளக்க முடியாத விஷயங்களும் உலகத்தில் இருக்கு சார். அதுக்கும் மரியாதை தரணும்."

"சரி இப்ப என்ன செய்யணும்கறே."

"ஒரு பக்கம் இவர் இறப்பையும் நம்பி அதுக்கானதை"

"அதுதான் என்ன?"

"வாழ்ந்து இவர் சாதிக்க நினைக்கற விஷயங்களை இந்த சில மணிகள்ல இவர் செய்ய நீங்க அனுமதி தரணும்."

"சில மணிகள்ல ஒருத்தன் எப்படி தன் வாழ்நாள்ல சாதிக்க நினைக்கறதை செய்ய முடியும்? உளர்றியே..."

"சார்... முதல்ல இவரை இன்ஷ்யூர் பண்ணச் சொல்லுங்க. நாளைக்கு இவர் வரையில் இந்த உலகம்



அழியப் போகுது. உறுதியா அழியப்போகுது. இவருக்கும் அது தெரியும். அப்ப இவர் என்ன செய்வார் அதை செய்யணும்..."

"நோ... பேத்தல்... பயங்கர பேத்தல். அப்படி நான் நினைச்சுட்டாலே செத்தவனாயிடறேன். சார் முதல்ல இவரை எழுந்து வெளியே போகச் சொல்லுங்க..."

-ஜான்சன் அலறினான். வீரபாரதியும் அவனை முறைத்துப் பார்த்தார். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார்.

"ஜான்சன் நீ உன் வேலையைப் பார். நான் ஸ்ரீநாத்தை பார்த்துக்கறேன். ஸ்ரீநாத் என் கூட வெளிய வா..."-அழைத்தபடி வெளியேறினார்.

ஜான்சன் பலி கோழிபோல தலையை உதறிக் கொண்டான்!

## 4

'அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு நடுவில் அமானுஷ்ய ஆராய்ச்சிகளும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. ஒரு சாரார் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை உலகறியச் செய்யலாம். அமானுஷ்ய ஆராய்ச்சி முடிவுகள் மட்டும் அனுபவ அறிவாகவே இன்னும் இருக்கிறது. என்றும் இருக்கும். அதுதான் அதன் தனித்தன்மை.'

வெளியே வந்த எடிட்டர் ஸ்ரீநாத்தின் தோள் மேல் கைபோட்ட படி அந்தப் பத்திரிகை அலுவலக மொட்டை மாடிக்கு அவனை அழைத்துச் சென்றார். ஸ்ரீநாத் பதற்றத்தில் இருந்தான்.

“ஸ்ரீ… நீ என்ன நினைக்கறே இப்ப சொல்.” மொட்டை மாடியில் இருந்து கொண்டு அக்கம் பக்க கட்டடம் மற்றும் தென்னைமரக் கூட்டங்களைப் பார்த்தபடி கேட்டார்.

“சார்… ச.ப’ நம் அறிவுக்கு அகப்பட முடியாத ஒருத்தர். நம்பிக்கையால மட்டும் தான் அவரை அறிய முடியும். நான் அப்படி அறிஞ்சவன். உங்களுக்கு ஒரு சேதி அவர் இப்படி ஒரு மரணச் செய்தியை எனக்கு முன்பே சொல்லியிருக்கார். நானும் ஜான்சன் போல நம்பல. ஆனா நடந்த பிறகு ஆடிப் போயிட்டேன்.”

“சரி… நீ நம்பறவனாவே இரு. இந்த நிமிஷம் நீ ஒரு ஜான்சன். அவரை நம்பக் கூடிய ஜான்சன். உன் மரண நாளைக்கு ஒரு மணின்னா என்ன செய்வியோ அதை எல்லாம் செய்யலாம் நீ…”

“தெரியுது சார்… நீங்க எங்க இரண்டு பேருக்கும் அதாவது நம்பிக்கை அவ நம்பிக்கை இரண்டுக்குமே சம அளவு இடம் தந்து எடையிடப் பார்க்கறீங்க?”

“வெச்சுக்கோயேன். சரி என்ன செய்யப் போற?”

“ச.ப’வை சரணடையப் போறேன் சார். ஜான்சன் தப்பிக்க வழி இருக்கான்னு கேக்கப் போறேன்.”

“உம் அப்புறம்?”

“ஜான்சன் குடும்பம் அவரை இழந்து வாடிடக் கூடாது சார். அதுக்கு என்ன உண்டோ அதை செய்வேன்.”

“பொருளாதார ரீதியாவா?”

“ஆமாம். அவரது ஆத்மார்த்த ஆசைகளை ஈடேற்றுவேன்.”

“அவர் உயிர் பிழைச்சாலே இது எல்லாம் நடந்துடுமே…?”



“அதுவும் சரிதான். நான் இப்பவே அவரை சரணடையறேன். ஜான்சன் உயிரைக் காப்பாற்றும்படி கேட்கறேன்.”

“அவர்தான் விதியை என்னால மாத்த முடியாதுன்னு சொல்வாராமே?”

“மார்க்கண்டேயன் கதை எதுக்கு சார் சொல்லப் பட்டிருக்கு. சத்யவான் சாவித்ரி கதையோட தத்துவம் என்ன சார்… விதி ஒரு கதவை அடைச்சாலும் மதியால அதை திறக்கலாம்னு தானே…?”

“ஓஹோ… அப்படி ஒரு கோணம் இருக்கோ… சரி முயற்சி செய். ஆனா பார்த்து இதை கசிய விட்டு பரபரப்புக்குண்டான விஷயமாக்கி ஊர் பார்க்கும்படி பேசும்படி செய்திடாதே.

நல்லதோ கெட்டதோ நாம உணர்ந்தா போதும்.

“நிச்சயமா சார். இது காதும் காதும் வெச்ச மாதிரி நடக்கணும். நடக்கும். நடத்துவேன்.”

“பார்த்து… நான் ஒரு மணிக்கு பிறகுதான் எந்த ஒரு முடிவுக்கும் வருவேன். அதாவது ஒரு பத்திரிகை ஆசிரியனா… ஆனா ஒரு சக மனுஷனா சொல்றேன். நீ ஏமாறப் போறே. ஜான்சன் சாதிக்கப் போறான். அந்த ச.ப’ தன் தலையை தொங்கப் போட்டுக்கப் போறார்.”

“பார்ப்போம் சார்…” ஸ்ரீநாத் பேசிவிட்டு அங்கிருந்து பரபரப்போடு கிளம்பினான்.

## 5

‘காலம் ஒரு விசித்திரமான சக்கரம். மனிதன் அதில் கிடந்து சுருளுபவன். சில நேரம் வண்ணக்

காட்சி சில நேரம் குருட்டுத் தன்மை இது தான் மனித அனுபவங்கள்! இதற்கு மேல் எதுவுமேயில்லை...'

'ச.ப' தியானத்தில் இருந்தார்.

கண்களைத் திறக்கும் போது பக்கத்தில் அவரது நேர்முக உதவியாளன் சக்தி.

''சக்தி... என்னை பார்க்க ஸ்ரீநாத் வந்திருக்கான் அவனைக் கூப்பிட்டு வா.'' என்றார்.

சக்தியும் அவரது அறையை விட்டு வெளியே சென்றான். பிரேயர் ஹாலில் பெரும் கூட்டம். அதில் ஸ்ரீநாத் பதற்றத்தோடு தெரிந்தான்.

சக்தி கச்சிதமாக அவனைப் பார்த்து சைகை காட்டி அழைத்தார். ஸ்ரீநாத்துக்கு புரிந்து விட்டது. தன் வருகை தெரிந்து ச.ப. அழைப்பது...

உள்ளே செல்கிறான்.

தேவலோகம் போன்ற சூழல்.

நடுவில் சொர்ணப்பிழம்பாய் பட்டு மெத்தைமேல். ச.ப.

''வணக்கம் ஸ்வாமி...'' சொல்லியபடியே ஸ்ரீநாத் தரைமேல் விழுகிறான்.

''வா ஸ்ரீநாத்... என்ன உன் நண்பர் சாவை பற்றிய சஞ்சலமா?'' கச்சிதமாகக் கேட்டார்.

''ஸ்வாமி...'' அவன் உதடு தழுதழுத்தது.

''உட்கார்...''

''இருக்கட்டும் ஸ்வாமி.''

''என்ன விஷயம் சொல்.''

''உங்களுக்கு தெரியாதா, பாவம் ஸ்வாமி ஜான்சன்.''

''சரி பரிதாபப்படு...''



இதை தவிர்க்க முடியாதா?''

''இப்படி சொன்னா எப்படி... முடியும்னு நீ நம்பறியா?''

''நான் நம்பறேன். என் ஸ்வாமி நீங்க மனசு வெச்சா...''

''உன் பக்தியும் நம்பிக்கையும் எனக்கு தெரியும் ஸ்ரீநாத். ஆனா விதியை மாத்த முடியாதே...''

''இல்ல ஸ்வாமி... எனக்கு ஒரே நம்பிக்கை தான். அது உங்களால் எதுவும் முடியும்ங்கறது தான்.''

''அப்படியா?''

''இப்படிக் கேட்டா எப்படி ஸ்வாமி ஜான்சன் பிழைக்கணும். பாவம் அவன்.''

''இதை அவனல்லவா உணரணும்?''

''உணர நீங்க வாய்ப்பு தராம அவன் எப்படி உணர முடியும்?''

''தந்துருக்கேன். அதனால்தான் நீ வந்திருக்கே...''

''ஸ்வாமி...''

''ஸ்ரீநாத், ஒருவன் தன் உடலை தானே கூறுபோட்டு பார்த்துக்க ஆசைப்படலாமா?''

''தெரியல ஸ்வாமி...''

''அப்படிச் செஞ்சா என்னாகும்...?''

''அவன் உயிர்போகும்...''

''அப்ப அவன் எப்படி பார்க்கமுடியும்?''

''உண்மைதான்...''

''நம்பிக்கை சார்ந்த விஷயங்களும் அப்படித்தானே.''

''அப்படி நினைக்காததாலே தானே ஸ்வாமி ஆராய்ச்சிகள் ஆசைகள்லாம் தொடருது...''

''நம்பிக்கை சார்ந்த விஷயங்கள்ள ஆராய்ச்சிக்கு இடமேது?''

''உண்மைதான் எனக்கு ஏத்த பதில் இது இல்லையே ஸ்வாமி.''

''தெரியும். உனக்கு ஜான்சனோட உயிர் வேணும். அவ்வளவுதானே?''

''ஆமாம்...''

''அவன் உயிரை நான் தந்துட்டா அவன் நானே பொய்யின்னு சொல்வானே...?''

''அவன் சொல்றதால நீங்க பொய் ஆயிடமுடியுமா?''

''அப்படி அவன் மீண்டா நான் சொன்னது பொய் ஆகித் தீரணும். கண்ணாடின்னா கீழே விழுந்தா உடையணும் ஸ்ரீநாத். இயல்புகளுக்கு எதுவுமே மாறுபடக் கூடாது...''

''என் நம்பிக்கை அப்ப வீண்தானா?''

''என்னை தர்ம சங்கடப்படுத்திறயே...''

''என்ன ஸ்வாமி இது. மனிதனைப்போல் நீங்களும் பேசலாமா?''

''மனித வடிவத்துல அந்த சரீரத்துக்குள் இருக்கும் போது பேசித்தானே தீரணும்.''

''இறுதியா என் நம்பிக்கைக்கு நீங்க தரப்போற பதில்...''

''பொறுத்திருந்து பார்... உன் நம்பிக்கை வீண் போகாதபடி செய்யறேன். அதேசமயம் விதியும் தன் கடமையைச் செய்யும்.''-புதிர் போட்டார் ச.ப...



புரியவில்லை ஸ்ரீநாத்துக்கு... இப்படி புரியாதபடி பல கோலங்கள் அவர் காட்டுவது அவனுக்கு ஒன்றும் புதிதில்லை.

எப்படியோ இந்த மட்டில் அவர் சாதகமாக ஒரு பதிலைச் சொன்ன சந்தோஷம் ஒரு பொன் ரேகையாக அவன் முகத்தில் மின்னியது. திரும்ப சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டு கிளம்பினான்.

## 6

'உயிர் என்பது எது? ஒரு துளி மூச்சுக் காற்றா... இல்லை கண்ணில் பார்வை சக்தியாக ஒளியோடு இருக்கிறதே அதுவா? குருடர்களும் உயிரோடு இருக்கிறார்களே என்றால் ஒளி இல்லை-வேறா? எது... எது...? எது கருவுக்குள் நுழைந்து கைகால் களை அசைக்கிறது? எது உடலைவிட்டுப் பறந்து வெளியேறுகிறது?'

சுறுசுறுப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தான் ஜான்சன்.

அவனுக்கு அவன் சொல்வதைக் கேட்கும் மனது. அதனால் அது எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

கண்கள் டி.வி. நியூஸ் பார்க்கின்றன.

கைகள் புரூஃப் திருத்துகின்றன. நடுநடுவே Layout திருத்தங்கள். வீரபாரதிக்கே அவனைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது.

''வாட் எ கிரேட் பர்சனாலிட்டி...''-வியந்து போனார்.

அப்படியே ஸ்ரீநாத் என்ன செய்து கொண்டிருப்பான் என்றும் யோசிக்கையில் செல்லுலரில் அவனே கூப்பிட்டான்.

"என்ன ஸ்ரீ..."

"சார்... கவலைப்படவேண்டாம் சார்."

"என்ன சொல்றே?"

"ஆமாம் சார்... சக்கரவர்த்தி பரந்தாமன் ஸ்வாமியை பார்த்தேன். கால்ல விழுந்தேன். ஜான்சன் உயிருக்கு எதுவும் ஆயிடக்கூடாதுன்னு சொன்னேன்... முதல்ல விதியை மாத்த முடியாதுன்னவர் பிறகு பாக்கறேன்னார்..."

-ஸ்ரீநாத் சொன்ன மறுவினாடி வீரபாரதி கலகலவெனச் சிரித்துவிட்டார்.

"சார்... எதுக்கு சார் சிரிக்கிறீங்க..."

"சிரிக்காம... உன் கடவுள் என்னப்பா பயங்கரமா கண்ணாமூச்சி விளையாட்றார். சரிசரி நீ வா. இனியும் இந்த விவகாரம் பத்தி பேசறதே பைத்தியக்காரத்தனம்..."

-வீரபாரதி குரலில் ஒரு தனி தைரியம் நூறு மீட்டர் ஓட்டம் ஓடியது.

திரும்பவும் சிரித்தார்...

உள்ளே வந்தார்... ஜான்சனை நெருங்கினார்.

அவன் சினிமா விமர்சனத்தில் இருந்தான். குனிந்து பார்த்தான்.

'உலகத்திலேயே சினிமா காதல்போல் கஷ்டமான விஷயம் எதுவுமே இருக்கமுடியாது. வெட்கத்துடனும் ரகசியத்துடனும் உள்ள விஷயம் காதல். அது என்னமோ தெரியவில்லை. சினிமாக்காரர்களுக்கு மட்டும் சுற்றி நூறுபேர் ஆடிப்பாடினால்தான் அது பொங்கிப்



பிரவாகிக்கிறது. ஒரு வரிக்கு ஒரு இடம் போய் பாடுகிறார்கள். நாராசமான கற்பனை இது... ஜனங்களும் ஐம்பது வருடங்களாக இதை ஏன் என்றே கேட்காதபடி ரசிக்கிறார்கள். எப்படி இப்படி அபத்தங்களை ஜனங்களால் ரசிக்க முடிகிறது?

சினிமா... ஆன்மிகம் எல்லாமே இங்கே பிழையாக இருக்கிறது. மிகையாகவும் இருக்கிறது.

-முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நிமிர்ந்தான். வீரபாரதி தெரிந்தார்.

"சார்..."

"என்ன விமர்சனம் எழுதறியா?"

"ஆமாம் சார்..."

"கொஞ்சம் கூட உனக்குப் பயம் இல்லை?"

"இல்ல சார், எதுக்கு சார் பயப்படணும். பயந்தால்லாம் பத்திரிகையாளனா இருக்க முடியுமா?"

"குட்... நான் பத்திரிகையாளர்களை ஜவான்களுக்கு சமமா நினைக்கிறவன். அவங்க கைல துப்பாக்கி. நம் கைல பேனா. நாட்டுக்குள் எல்லையை மீறுகின்றவர்களை நாம் சுட்றோம். மொத்தத்துல அவங்க எல்லை பாதுகாப்பு. நாம் உள்ளுக்குள்ளே பாதுகாப்பு. இந்த விஷயத்துக்கு தைரியம் தெளிவு இரண்டும்தான் பிரதானம். இரண்டும் உன்கிட்ட இருக்கு. ஐ வில் அப்ரிஷியேட் யூ" தோள் தட்டினார்.

"என்ன சார் ரொம்ப பாராட்றீங்க... வேண்டாம் சார் இதுதான் பயத்தை தருது" என்றான் ஜான்சன்.

"இல்ல ஜான்சன் இது என் மனமார்ந்த பாராட்டு... பை த பை அந்த ச.ப.'ங்கற சக்கரவர்த்தி பரந்தாமன் உன்

உயிரை காப்பாத்தறதா சொல்லிட்டாராம். ஸ்ரீநாத் போன் பண்ணினான். எனக்கு சிரிப்பு வந்திடுச்சு...

"போகாத உயிருக்கு இவர் பாதுகாவலராமா... வேடிக்கையாதான் சார் இருக்கு..."

"எப்படியோ இந்த விஷயமே போதும் அவர் ஒரு போலி மனிதர்ங்கறத நிரூபிக்கறதுக்கு. முதல்ல மிரட்டறது... அப்புறம் கால்ல விழுந்தா காப்பாத்தறேங்கறது... வேடிக்கையா இருக்கு..."

-வீரபாரதி சிரிக்கத் தொடங்கும்போது திடுமென்று ஜான்சனுக்கு நெஞ்சையடைத்தது. முகத்தில் சரங்கள் விழுந்தது.

"என்ன ஜான்சன்... என்னாச்சு?"

"நெஞ்சு... நெஞ்சுவலிக்குது சார்."

"என்னப்பா சொல்றே?"

"சார்... சார்..."-ஜான்சன் சுருள ஆரம்பித்தான். வீரபாரதி ஆடிப் போகிறார். கைகள் பரபரக்கின்றன கத்துகிறார். சிலர் எட்டிப் பார்க்க ஒருவன் டாக்டருக்கு போன் போட்டான்.

அதற்குள்ளாகவே கிணற்றில் விழுந்து எழுந்தமாதிரி வியர்த்துவிட்டது ஜான்சனுக்கு.

'மை குட் நெஸ்... இது ஹார்ட் அட்டாக்!'

-வீரபாரதி கச்சிதமாக புரிந்து கொள்கிறார். அதுவரை உதட்டில் இருந்த எக்காளம் கேலி தைரியம் எல்லாம் ஒரு வினாடி நின்று ஆட்டம் போட்டன.

ஜான்சனை படுக்க வைத்து தண்ணீர் கொடுத்து நெஞ்சைத் தடவி விட்டு...

⁂ ⁂ ⁂



டாக்டர் வந்தபோது கிட்டதட்ட மரவட்டையாகச் சுருண்டுவிட்டிருந்தான் ஜான்சன்.

"இட்ஸ் எ சிவியர் அட்டாக்... இன்டென்சிவ்கேர்ல அட்மிட் பண்ணணும்."-டாக்டர் தந்தியடித்தார்.

அடுத்த சில நிமிடங்களில் அவனைச் சுமந்தபடி ஒரு ஆம்ப்லன்ஸ் ஆஸ்பத்திரிக்கு பறந்தது.

மனைவிக்கும் செய்தி போனது...

ஸ்ரீநாத் வந்த செய்தியறிந்த போது அவனுக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை. ஒரு ஓரமாக போய் உட்கார்ந்து விட்டான்.

"ச.ப. சொன்னால் சொன்னது தான்"-உள்ளுக்குள் ஒரு குரல் உரத்து சொல்லி முடிந்தது.

'இனியாச்சும் நம்புங்க எடிட்டர் சார்...' ஒருவெட்ட வெளியில் நின்று சற்றே முதுகை வளைத்து வானத்தைப் பார்த்துக் கத்த வேண்டும் போல் தோன்றியது.

"சார் நீங்க ஹாஸ்பிடலுக்கு போகல..."-ஒரு சகா கேட்கிறான்.

"போகணும். போகணும். ஆமா ஜான்சனுக்கு இதுக்கு முந்தி ஹார்ட் அட்டாக் வந்திருக்கா?"

"இல்ல சார். இதுதான் முதல் தடவையாம்."

"என்ன... எதாவது ரொம்ப உணர்ச்சி வசப்பட்ட நிலைல இருந்தாரா?"

"அதெல்லாம் இல்லை சார்.. நல்லாதான் இருந்தார். எடிட்டர் கூட சிரிச்சு பேசிக்கிட்டிருந்தார்..."

-காதில் விழும் விளக்கங்கள் ஸ்ரீநாத்துக்கு அது விதியின் வேலை தான் என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன. எழுந்து ஆஸ்பத்திரிக்கு புறப்பட ஆயத்தமாகிறான்!

∴ ∴ ∴

ஹாஸ்பிடலில் ஜான்சனின் மனைவியும் மகளும் வந்திருந்தனர். வீரபாரதி ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். சூழ்நிலையை சற்று சகஜப்படுத்த பெண்ணிடம் பேச்சு கொடுக்க ஆரம்பித்தார்.

“உன் பேர் என்ன பாப்பா?”

................

“பேசு... நான் உன் தாத்தா மாதிரி...”

“சார் சார்... அவளால பேச முடியாது. அவ பிறவியிலேயே ஊமையா...” ஜான்சன் மனைவி மென்று துப்பினாள்.

“அப்படியா... ஜான்சன் என்கிட்ட சொன்னதே யில்லையே...”

“ஆமாம். அவருக்கு மகள் எப்படியும் பேசிடுவாங்கற நம்பிக்கை அதனால ஊமைங்கற வார்த்தையையே பயன்படுத்தமாட்டார். இப்படி ஒரு பொண்ணை கொடுத்துட்டு இவர் இப்படி படுத்திட்டாரே சார்...”. அந்தப் பெண் சரசரவென்று கண்களை அருவியாக்கினாள். வீரபாரதிக்கு வலித்தது. நிறையவே...

“ஆமா இப்படி இதுக்கு முந்தி எப்பவாவது நெஞ்சு வலி...”

“வந்ததேயில்லை. யோகாசனம்லாம் பண்றவர் சார். எந்த கெட்டப் பழக்கமும் கிடையாது.”



அப்படியானால் எப்படி?

ஒருவேளை சக்கரவர்த்தி பரந்தாமன் சொன்னது உள்ளே ஒளிந்திருந்து ஒரு அழுத்தம் கொடுத்து இப்படி செய்துவிட்டதோ?

வராண்டாவில் நடக்கும்போது அவருக்குள் விதம் விதமான எண்ணங்கள்.

இப்படி ஒரு அசைன்மென்டே தந்திருக்கக் கூடாது. நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன என்று விட்டிருக்க வேண்டும். செய்தது பெரிய தவறு என்றும் தோன்றும் போது டாக்டர் எட்டிப் பார்த்தார்.

சினிமா டாக்டர் போல சரியான சமயத்துல வந்தீங்க என்று சொல்லாமல் வந்து காலருகில் சன்னமாக ‘இட் ஈஸ் எ சிவியர் அட்டாக்’ என்றார்.

“பொழைச்சிடுவார்ல...”

“ட்ரை அவர்லெவல் பெஸ்ட்.”

“பொழைக் கணும் டாக்டர். பொழைச்சாதான் பல விஷயங்களுக்கு உயிர் வரும்...”

“என்ன சொல்றீங்க?”

“என்ன சொல்ல... ஜான்சன் ஒரு எக்ஸலன்ட் கேரக்டர். பத்திரிகையாளர்கள்ல ரத்னம்னு சொல்வேன். பிழைச்சா நல்ல எழுத்தும் பார்வைகளும் இந்த சமுதாயத்துக்கு கிடைக்கும் அதைச் சொன்னேன்...”

-வீரபாரதி சொல்ல டாக்டர் தோள்மேல் கை போட்டபடி தன் அறை பக்கம் அவரை தள்ளிக்கொண்டு போக ஆரம்பித்தார்.

டாக்டர்களுக்கே உரித்தான அளவு...

சுவரில் மெடிகல் ரெப்புகள் கொண்டு வந்து ஒட்டியிருக்கும் ஸ்டிக்கர்கள்.

டேபிள்மேல் வகை தொகையில்லாத காம்பிளிமென்ட்டுகள் நடுவில் மேஜை கண்ணாடிக்கு கீழே சக்கரவர்த்தி பரந்தாமனின் ஆசீர்வதிப்பது போன்ற படம்.

அதை பார்க்கவும் பச்சென்றாகிவிட்டது வீரபாரதிக்கு.

"என்ன வீரபாரதி... எனிதிங் ராங்."

"நத்திங்... ஆமா இதென்ன போட்டோ?"

"சுவாமி ச.பா... உங்களுக்கு தெரியாது. கேள்விப்பட்டதில்லை நீங்க?"

"உம் பட்டுருக்கேன்... இந்த நாட்டுல பாதிபேருக்கு மேல் இவர் பக்தர்கள்தானே..."

"வெரி கிரேட் மேன். நிஜமாலுமே தெய்வப்பிறவி."

"ஒரு டாக்டர் நீங்களே இப்படிச் சொல்றது ஆச்சரியமாயிருக்கு."

"ஒரு பத்திரிகையாளர் நீங்க. இப்படித்தான் சொல்வீங்க. ஒருமுறை அனுபவப்பட்டுட்டா மாறிடும்..."

"அனுபவப்பட்டுட்டா... அனுபவப்பட்டுட்டான்னா எப்படி புரியல."

"அது வந்து... எனக்கு சொல்லத் தெரியல வீரபாரதி. ஆனா ஒண்ணு நமக்குமேல ஒரு சக்தி இருக்கு. அதோட பிரதிநிதி இவர். எனக்கு சந்தேகமில்ல..."

"அதான் எப்படி?"

"என் ட்ரீட்மென்ட்ல ஒரு கேன்சர் பேஷண்ட். 99 சதம் அவர் பிழைக்கமுடியாதுன்னு நாங்க நாள் குறிச்சுட்டோம். அவர் ஒரு ச.ப. பக்தர். அவர் நம்பிக்கை அந்த பக்தரை



காப்பாத்தி அந்த 99 சத சான்சே இல்லாம செய்திடிச்சுன்னா பாத்துக்கயேன்..."

"இது தற்செயலா கூட நடந்துருக்கலாமில்லையா?"

"இருக்கலாம். ஆனா எப்பவும் தற்செயல்ங்கறது ஒரு தடவை நடப்பதுதான். பல தடவைகள் நடந்தா?"

"எது பல தடவை நடந்திருக்கு?"

"ச. பாவோட திருவிளையாடல்..." வீரபாரதிக்கு எரிச்சல் வந்தது.

"ஏன் டாக்டர் இந்த மாதிரி அற்புதம்லாம் இந்தியால மட்டும்தான் நடக்கணுமா... இந்த உலகத்துல வேற எங்கேயும் நடக்காதா... அங்கெல்லாமும் ஜனங்கள் வாழ்க்கைகள் இருக்குல்ல...?"

"ஏன் நடக்காம... நடந்துகிட்டுதான் இருக்கு வீரபாரதி. ச.ப. இருக்கும் போதே அமெரிக்காவுலே ஒரு பக்தர் முன்னால தோன்றியிருக்கார்."

"புடலங்கா. இவ்வளவு சக்தியுள்ளவரை வெச்சிட்டு, கார்கில் சண்டையில் எவ்வளவு மரணங்கள்... தேவையா? இவர் நவாஸ் ஷெரீப் மனசுல புகுந்து நட்போட இருக்கற எண்ணத்தை வலுப்படுத்தியிருக்கலாமே"

"இதுக்கெல்லாம் சரியான பதில் இருக்கு வீரபாரதி. இந்த யுத்தம் மரணம்லாம் கசப்பான அனுபவங்கள்தான். ஆனா இதனால எவ்வளவோ நல்லதுகளும் கண்ணுக்கு தெரியாம நடக்கலாம் இல்லியா?"

"சப்பைக்கட்டு... சரியான சப்பைக்கட்டு. மைடியர் டாக்டர் சார். மனுஷ சக்திக்கு ஒரு எல்லை இருக்கு. பயலாஜிகலா சில கணக்கு இருக்கு. அதை கூறுகட்டி பிரிச்சுப் பார்க்கமுடியும். மத்த எல்லாம் சுத்த ஹம்பக்..."

"அப்ப ச.ப. வோட சாகசங்கள் உங்க வரைல சித்து விளையாட்டா...?"

"இந்த சித்து விளையாட்டே ஒரு குழப்பமான விஷயம்தானே?"

"ஓ.கே... நாம இதைப்பத்தி பேசி ஏன் மண்டையை உடைச்சிக்கணும். நீங்க எதுக்கும் உங்க சப் எடிட்டர் விஷயத்துல மோசமான முடிவும் வரலாம். மனச திடப்படுத்திக்குங்க..."

டாக்டர் இறுதியாக இப்படி கீறிப் பார்க்கவேண்டாம். வீரபாரதி முகத்தில் கவலை குழப்பம் ஹீரோ ஹீரோயின் கணக்காக டுயட் பாடிற்று.

கைகட்டியபடியே வெளியே வந்தார்.

ஸ்ரீநாத் நுழைந்து கொண்டிருந்தான்.

"சார்..."

"ப்ச்ச!"

"என்ன சார்... நான் சொன்னப்ப நம்பலையே நீங்க இப்ப பார்த்தீங்களா?"

"வேண்டாம் ஸ்ரீநாத் தயவு செய்து நீயும் அந்த சாமியார் தொடர்பாக எதுவும் பேசவேண்டாம். வர்ற வார மேட்டர்லாம் டேபிள்ல அப்படியே இருக்கு. கலெக்ட் பண்ணி ஃபிக்ஸ் பண்ணுங்க. இங்க நான் பாத்துக்கறேன்."

"அதை நான் பாத்துக்கறேன். ஆனா திரும்பவும் சொல்றேன். உங்களுக்கு இந்த ஈகோவும் கர்வமும் ஆகாது சார். வரேன்."

வந்த சுவடு தெரியாதபடி கிளம்புகிறான். அவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறதோ? வீரபாரதி பார்த்தபடியே நிற்கிறார்.



# 7

'நாம் பிறக்கும் முன்பே இந்த உலகம் இருந்தது. நாம் போன பிறகும் இது இருக்கும். வந்து போகிற நாம் காலக் கணக்கில் கரைந்து போகிற புள்ளிக்கும் கீழானவர்கள். புள்ளிகளால் உலகை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் புள்ளி உலகில் கரையும் போது அதுவும் உலகமாகிறது. அப்பொழுது புரியுமோ?"

தள்ளாடியபடி வந்திருக்கிறார் அந்த மனிதர். முகம் கொள்ளாத தாடி. அழுக்கு வேட்டி சட்டை. ரிசப்ஷனில் இருக்கும் ஸ்ருங்காரமான பெண்ணைப் பார்த்து "வீரபாரதி இருக்காரா?" என்று கேட்டார்.

"யார் எடிட்டரா?"

"ஓ... அவன் எடிட்டரா இங்க..."

"நீங்க...?"

"நான் உங்க எடிட்டருக்கு எடிட்டர். அதாவது அவனோட பள்ளிக்கூட வாத்தியார்."

"பேர்..."

"பிரம்மானந்தம்."

"சார் ஹாஸ்பிடலுக்கு போயிருக்கார். இன்னிக்கு வரமாட்டார்."

"என்ன உடம்புக்கு?"

"அவருக்கு ஒண்ணுமில்லை. எங்க ஆபீஸ் சப் எடிட்டர் ஒருத்தருக்கு ஹார்ட் அட்டாக். அதான்."

"அப்படியா... நான் அவசியம் அவனைப் பார்க்கணும்மா..."

"அப்ப ஹாஸ்பிடலுக்கு போய் பாருங்க..."

“எந்த ஹாஸ்பிடல்?”

அந்த பெண் பேரைச் சொன்னாள். அவரும் திரும்பத் தொடங்கினார். நடையில் சரியான சாராயத் தள்ளாடல். ஆனால் இங்கே போதை இல்லை முதுமை.

அந்த ஆட்டோ ஹாஸ்பிடலில் தேங்கி அந்த பெரியவரை உதிர்த்து விட்டு மீட்டருக்கு மேல் காச பார்த்து விட்டுத்தான் நகர்ந்தது.

“நான் ஏழைப்பட்டவன்பா... என்னை ஏமாத்தாதே...” என்று அவர் சொன்னது ஆட்டோ டிரைவர் காதிலேயே விழவில்லை.

தடுமாறியபடி நடக்கிறார். மருந்துவாடை, ஸ்ட்ரெச்சர் ஓட்டம், அழுகை பிலாக்கணம் எல்லாம் காதிலும் மூக்கிலும் எதிரொலிக்க கண்ணில் படுகிறார் வீரபாரதி.

“சார்ர்ர்ர்...”-ஓடி வருகிறார்.

“எப்படி இருக்கே?”

“நல்லா இருக்கேன். எங்க சார் இவ்வளவு தூரம்?”

“ஒண்ணுமில்லப்பா உன் கிட்ட ஒரு உதவி கேட்டு வந்துருக்கேன்.”

“நான் இங்க இருக்கறது எப்படி தெரியும் உங்களுக்கு?”

“உன் பத்திரிகைல சொன்னாங்களே...”

“ஐய்யோ அங்க போயிருந்திங்களாக்கும்...”

“ஆமாம்பா...”

“வாங்கோ இப்படி உக்காருங்க. என்ன விஷயம்?”

“ஒண்ணுமில்லப்பா. எனக்கொரு பேரன் இருக்கான். திடீர்னு காணாம போயிட்டான். நானும் தேடாத



இடமில்லை. உன் பத்திரிகைல ஒரு விளம்பரம் அது சம்பந்தமாக கொடுக்கணும்.”

“அதுக்கென்ன கொடுத்துட்றேன் சார். ஆமா என்ன வயசு பேரனுக்கு?”

“ஆறு வயசுதான். தலைச்சன் குழந்தைப்பா. யாராவது பலி கிலி கொடுக்க தூக்கிட்டு போய்ட்டாங்களோன்னு ரொம்ப பயமா இருக்கு...”

“பலியா... என்ன சார் இது அப்படியெல்லாம் இருக்காது...”

“அப்படி எல்லாம் சொல்லாதே. என் கிராமத்துல அந்த மாதிரி பல சம்பவங்கள் நடந்திருக்கு. அதான் பயமா இருக்கு.”

‘பல சம்பவங்களா... இது வெளி உலகுக்கு தெரியுமா?”

“அரசல் புரசலா தெரியும். ஆனா அதைப்பத்தி பிரஸ்தாபிக்க யாருக்கும் தைரியம் கிடையாது, ஏன்னா பலி கொடுக்கற மனிதர்கள் ரொம்ப அபாயகரமானவங்க...”

“ஆமாம். அவங்க அபாயமான அரக்கங்கதான். அவங்களை விடக் கூடாது. சரியான மூட நம்பிக்கை பிடிச்ச பிசாசுப் பசங்க...”

“என்னப்பா பண்ணச் சொல்றே? கெட்ட ஆவிகளை சமாளிக்க இப்படி எல்லாம் சிலர் பண்ணிட்றாங்க...”

ஆசிரியர் பிரம்மானந்தம் தன் பேச்சின் போக்கில் கெட்ட ஆவி என்று பேசியது வீரபாரதியை காலரைப் பிடித்து திருப்பியது.

“என்ன சொன்னீங்க... கெட்ட ஆவிகளா?”

“ஆமாம்பா... நீ கேள்விபட்டதில்லையா?”

“இந்த ஆவி சமாசாரத்தை நம்பறீங்களே சார்...”

"அடப்பாவி... இருக்கறது எப்படி இல்லேன்னு சொல்ல முடியும்?"

"எங்க சார் இருக்கு... நீங்க வேற?"

"என்கூட வா காட்றேன். பாத்தா அரண்டு போயிடுவே."

"வேண்டாம் சார், எதாவது புகையை பார்த்துட்டு நீங்களும் பயந்து போய் மத்தவங்களையும் பயமுறுத்தாதீங்க. அதெல்லாம் பொய். கப்சா. அதை விடுங்க. உங்க பேரனைப் பத்தின டீடெய்ல்ஸ் தாங்க. போட்டோ இருக்கா."

"எல்லாம் இந்த கவர்ல இருக்கு. இதோ பார் வீரபாரதி நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்கோ. சில விஷயங்களை எல்லாம் அனுபவிச்சாதான் மனுஷங்க நம்புவாங்க. இந்த ஆவி சமாசாரமும் அப்படிதான். என் கிராமத்துக்கு பக்கத்துல இருக்கு கலிங்கமேடுன்னு ஒரு இடம். அங்க ஒருத்தன் இருக்கான். ஆவிகளை கைக்குள்ள வெச்சுகிட்டு அவன் காட்ற வித்தையை பார்த்தா அரண்டு போயிடுவே..."

"என்ன வித்தையெல்லாம் சார் அவர் காட்றார்?"

"நீ யார்... என்ன பண்றே... என்ன நினைக்கறே எல்லாத்தையும் புட்டு புட்டு வெச்சிடுவான்."

"இதுக்கு ஃபேஸ் ரீடிங் தெரிஞ்சா போதுமே. எதுக்கு ஆவி புகையெல்லாம்?"

"டேய்... நான் இதெல்லாம் யோசிக்காதவனா? உனக்கு சைன்ஸ் சொல்லிக் கொடுத்தவன் நான். இந்த கேள்வியெல்லாம் கேட்டுக்காம இருப்பேனா என்ன..."

"அப்ப அதெல்லாம் உண்மையா..."



"உண்மைங்கறதாலதான் பல சாமியார்கள் வண்டி இன்னிக்கு ஓடிகிட்டு இருக்கு. கேரளாவுல எனக்கு தெரிஞ்சு ஒரு நம்பூதிரி இருக்கான். அவன் இந்த ஆவி, பூத பிசாசுகளை பிடிச்சு வெச்சிருப்பவன்.

வருஷத்துக்கு ஒருதடவை இவனை சில சாமியார்கள் போய் பார்த்து பணம் கட்டுவாங்க, பதிலுக்கு அவனும் எதாவது ஒரு ஏவல் தேவதையையோ, ஆவியையோ அவங்களுக்கு ஏவல் செய்ய பணிப்பான், இவங்களும் திரும்பிவந்து அவை துணையோட அருள்வாக்கு சொல்லி இங்க பிழைப்பை ஓட்டுவாங்க."

-பிரம்மனாந்தம் சொல்வதில் அங்கும் இங்குமாக நிஜங்களும் பொய்யும் கலந்து தெரிந்தது.

அப்படியே இந்த விஷயத்தை சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு பொருத்திப் பார்த்தார்.

தன்னோடு பேசும்போது கூட உங்கள் பேத்தி வயதுக்கு வந்துவிடுவாள் இன்று என்றாரே... எதிரில் டீ கப்பில் டீ இருப்பதை கூட சொல்ல முடிந்ததே...

ஒருவேளை ஆசிரியர் பிரம்மானந்தம் சொல்வது போல எல்லாம் ஆவிகள் செயலோ? அப்படியானால் ஆவி என்பது நிஜமோ?

தன்னை மறந்து சிலையாகி யோசித்தபடி அமர்ந்து விட்டவரைப் பார்க்கவும் பிரம்மானந்தத்துக்கு இடித்தது.

"என்ன வீரபாரதி... என்ன சிந்தனை?"

"ஒண்ணுமில்லை நீங்க சொன்னமாதிரி இங்க ஒருத்தர் இருக்கார். அதான் யோசிச்சேன்."

"ஒருத்தரா. ஊருக்கு நூறுபேர் இருக்காங்க. நேத்து கூட ஊர் மயானத்துல ஒருத்தன் வந்து உக்காந்துகிட்டு

கடாவெட்டி தள்ளிகிட்டு இருந்தான். சட்டி சட்டியா ரத்தம். கேட்டா முனிக்கு சாந்தி பண்றானாம்.

இப்படிப்பட்டவங்க கையிலெல்லாம் என் பேரன் சிக்கிட்டா என்ன பண்றதுன்னுதான் யோசிக்கறேன். குலை நடுங்குது வீரபாரதி.''

''கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கறேன். நல்லா பளிச்சுன்னு போட்டுறேன். டி.வி.க்கும் சொல்லிட்டேன்.''

''செய்யப்பா உனக்கு புண்ணியமா போகட்டும். நான் வராட்டா...''

-பிரம்மானந்தம் கிளம்பத் தயாரானார். வீரபாரதியும் ஒரு கும்பிடு போட்டு அனுப்பிவிட்டு திரும்பினார்.

செல்போன் கூப்பிட்டுது.

காதைக் கொடுத்தபோது ஒரு நல்ல செய்தி.

''அப்பா நம்ம ரம்யா பெரியவளாயிட்டா.'' அந்தச் செய்தி வீரபாரதியை ஒரு ஓரமாக சுருட்டி உட்கார்த்தி விட்டது. அந்த க்ஷணம் சக்கரவர்த்தி பரந்தாமனைப் பற்றிய எண்ணத்தில் புதுப்புது பரிமாணங்கள்.

ஆசிரியரை மட்டும் சந்திக்காமல் இருந்திருந்தால் அவர் மட்டும் அந்த ஆவி பேய் சமாசாரங்களை பற்றி பேசாமல் இருந்திருந்தால் இப்பொழுது நிச்சயம் சக்கரவர்த்தி பரந்தாமன் ஒரு தெய்வமாகவே ஆகியிருப்பாரோ என்னவோ...

நடுவில் டாக்டரிடம் இருந்து அழைப்பு வந்தது. பல்ஸ் டவுன் ஆகிவருவதை கூறியவர் நம்பிக்கையிருந்தால் கடவுளைப் பிரார்த்திக்க சொன்னபோதுதான் ஒரு மாதிரியாகிவிட்டது.

ஜான்சன் மனைவி அழுதபடியே இருந்தாள்.



அந்த ஊமைப்பெண் அம்மா அழுவதற்கான காரணமே தெரியாமல் அவளைப்பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தது.

''ஜான்சன் நீ செத்துவிடக்கூடாது. உனக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது'' வீரபாரதி தீர்மானப் பின்னல் போட்டுக் கொண்டு எழுந்தார்.

அவளை நெருங்கினார்.

''இதோ பாரும்மா தைரியமா இரு. நான் ஒரு முக்கியமான வேலையா போறேன். போய்ட்டு வந்துட்றேன்.''

-வெளியே காத்திருக்கும் மாருதியை கிளப்பினார். அது நேராக சக்கரவர்த்தி பரந்தாமனின் ஆஸ்ரம இருப்பிடம் நோக்கித்தான் போனது.

நேருக்கு நேர் சக்கரவர்த்தி பராந்தாமனிடமே சில விஷயங்களைப் பேசி பார்த்து விடுவது நல்லது என்று தோன்றியதால் வந்த விளைவு.

ஆஸ்ரம வாசலில் அதிசயமாக யாரையும் காணவில்லை. வழக்கமாக கூட்டம் கட்டி ஏறும். காரும் ஆட்டோவும் புகை கக்கித்தள்ளும். இன்று என்னாயிற்று? காரைவிட்டு இறங்கி உள்ளே நுழையவும் எதிர்ப்பட்டான் ஒருவன்.

''ஸ்வாமிஜி இல்லையா?''

''இல்லையே... அவர் கேரளா போயிருக்கார்...''

''கேரளாவுக்கா... அங்க எங்க?''

''அதெல்லாம் தெரியாது.''-அவன் போய்விட்டான். வீரபாரதி நெற்றியில் டிராகன் வால் விழுந்து புரள்வது போல ஒரு நமைச்சல்.

ஆசிரியர் பிரம்மானந்தம் மனதின் மைதானத்தின் நடுவில் நின்று பேசுவது போலவும் ஒரு பிரமை.

சக்கரவர்த்தி பரந்தாமன் கேராளவுக்கு ஒருவேளை பிரம்மானந்தம் சொன்னது போல எவனாவது நம்பூதிரியைப் பார்க்கத்தான் போயிருக்கிறாரோ?

அவன் தரும் பேய் பிசாசு சமாசாரங்களை வைத்துக் கொண்டுதான் இங்கே டிகால் வேலையெல்லாம் காட்டுகின்றாரோ?

நின்றபடியே யோசிக்கிறார்.

''என்ன சார் போகலையா... நாளைக்கு வந்துடுவார் ஸ்வாமி கேரளா பக்கம்தான் ஆலப்புழைவரை போயிருக்கார்''-ஒருவன் கேட்டபடி தாண்டிப்போனான்.

ஆலப்புழை வரைக்குமா... எதற்காக இருக்கும்... விடக்கூடாது விடவே கூடாது. மனதிற்குள் கேரளத்து நிருபர் அச்சுதன் குட்டி ஞாபகத்துக்கு வந்தான்.

அச்சுதன் குட்டி உனக்கொரு அசைன்மெண்ட்!

# 8

'இந்த உலகத்தில் அறிவதில் பிரதானமானது தன்னை அறிவதே... அந்த முயற்சியை ஒருவன் மேற்கொண்டால் ஏழு பிறப்பையும் அறிந்து கொள்ள ஜாதகம் துணை செய்யும். அதோடு தியானமும் தவமும் சேர்ந்துவிட்டால் காற்றைப் பார்க்கும் அளவு கண்களுக்கு ஒளிவரும். வந்திருக்கிறது. அதற்குப் பெயர்தான் ஞானதிருஷ்டி.

மணி ஆறாகிவிட்டிருந்தது.

அச்சுதன் குட்டி தொலைபேசி மூலம் செய்தியறிந்த போது மிகச்சாதாரணமாக அதை எதிர்கொண்டான்.



“இதெல்லாம் ரொம்ப சாதாரணமான விஷயமாச்சே சார் இங்க.” என்றான்.

“என்ன சாதாரணமோ... நீ எப்படியாவது சக்கரவர்த்தி பரந்தாமனை ஃபாலோ பண்ணி அந்த ஆள் யாரை சந்திக்கிறான் என்ன பண்றாங்கறதை கண்டுபிடிச்சு சொல்.''

இங்க ஜான்சன் நிலை ரொம்ப மோசம்.

ஜான்சனுக்கு வந்துருக்கற ஹார்ட் அட்டாக் இயல்புக்கும் வயசுக்கும் மீறின ஒண்ணு. அஃப்கோர்ஸ் எந்த ஹார்ட் அட்டாக் யாருக்கும் வேணும்னாலும் எந்த வயசுலையும் வரலாம். இருந்தாலும் இப்ப இந்த சம்பவத்துக்கு பிறகு என்னால கேஷுவலா இருக்க முடியல.

ஜான்சனை அந்த சக்கரவர்த்தி பரந்தாமன்தான் எதாவது செய்வினை செய்து படுக்கவெச்சுட்டாரோன்னுல்லாம் தோணுது.”

“இருக்கலாம் சார்... சில சாமியார்கள் தங்களோட இமேஜை காப்பாத்திக்க எந்த எல்லைக்கும் போவாங்க. நம்பி நாம கால்ல விழுற வரை விடமாட்டாங்க...''

“நானும் இந்த மந்திர தந்திரங்களை விடப்போறதில்ல. எது உண்மையோ அது எனக்கு தெரிஞ்சாகணும். ஜான்சனும் பிழைச்சாகணும்.''

“நீங்க கவலைப்படாதீங்க... இங்க எனக்கு தெரிஞ்சு ஒரு பெரியவர் இருக்கார். வேதநாராயண நம்பூதிரின்னு பேர்... நூத்து பத்து வயசு. இன்னிக்கும் மனுஷன் அதிகாலைல புழாவுல பச்சைத் தண்ணில குளிக்கறவர். நல்ல காரியங்களுக்கு மட்டுமே மந்திர தந்திரங்களை பயன்படுத்தறவர். நான் அவரைப் போய் பார்த்து ஜான்சனுக்கு உதவ முடியுமான்னு பாக்கறேன்.''

"முதல்ல அதைச் செய் அச்சுதா, உனக்கு புண்ணியமா போகும். அரசியல்வாதிகளோட மிரட்டல்களையும், ரவுடிகள் சமூக வீரோதிகள் மிரட்டல்களையும் ஒரு பத்திரிகையாளன் சந்திருச்சிருக்கான். ஆனா ஒரு சாமியார் மூலமா வந்துருக்கற இந்த மாதிரியான மிரட்டல் எனக்கு கொஞ்சம் புதுசுதான். இதுல நான் ஜெயிச்சே தீரணும்."

"கவலைப்படாதீங்க... நான் பாத்துக்கறேன்..."

"யூ ஹேவ் வெரி ஃப்யூ அவர்ஸ் ரொம்ப வேகமா இருக்கணும் உன் செயல்..."

"பாத்துக்கறேன் விடுங்க ஜனாதிபதியையே நான் செக்யூரிட்டியை மீறி சந்திச்சு பேட்டி எடுத்திருக்கேன். இது என்ன..."

"ஓ.கே. ஆல் த பெஸ்ட்..."

அச்சுதன் போனை வைத்தான். நிமிர்ந்தான். தன் வீட்டை விட்டு வெளியே வந்தான். தென்னை சூழ்ந்த பச்சைக் கேரளத்தின் மலைப்பாங்கான வீதிகளின் சரிவில் ஆட்டோக்களின் ஊடுருவல்கள்.

ஒன்றை கை தட்டி அழைத்து ஏறி அமர்ந்தான். "வேதபுரம் போய்க்கோ..." என்றான்.

வேதபுரம்.

வேத நாராயண நம்பூதிரி இருக்கும் இடத்தின் பெயர். ஆறும் கடலும் சங்கமிக்கும் அழகான இடத்தை ஒட்டி ஆயிரமாயிரம் தென்னைக்கு நடுவில் குளிரக் குளிரக் கிடந்தது. ஆட்டோ குளிர் நடுக்கக்காரனாய் குலுங்கியபடி உள்ளே நுழைகிறது.

உள்ளே ஒரு ஓட்டுக் கூரை வீடு... ஆனால் மாடி போல் உயரம். சீட்டுக் கட்டு போல் அடுக்கு. பளிங்குக்கல் தாழ்வாரத்தோடு ஜிலு ஜிலுப்போடு... கூடவே மின்சார



விளக்கே இல்லாத அந்த காலக் கோயில் போல ஒரு வித இருட்டு.

அச்சுதன் நுழைகிறான்.

அங்கங்கே மூங்கில் பிரம்பு நாற்காலிகள் ஒருவித தசாங்க வாசம் பரவிய காற்று. ஊடே "ஆரானு" என்கிற கேள்வி.

கேள்வி வந்த திக்கைப் பார்த்த போது ஒரு மூலையாக தீட்டுப் பெண் போல ஒரு கிழட்டு உருவம் பனை ஓலைப் பாய் ஒன்றின் மேல் தெரிந்தது. காஞ்சிப் பெரியவர் திரும்ப வந்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றியது.

"நம்பூதிரி... நான் அச்சுதன் நீங்கள காணாமின்னு."

"எந்தா விஷயம்."

அவன் அவர் அருகே பவ்யமாக அமர்ந்து விளக்கி முடித்தான். சரியாக காது கேட்காதபடியால் வேத நாராயண நம்பூதிரியும் காதருகே கை வைத்துக்கொண்டு ஒலியை கூட்டிப் பிடித்து கேட்டுக் கொண்டார்.

பின் முகத்தில் சுருக்கம் பரவ மோடு பார்த்தார். இனி அவர்களது மலையாளம் நமது தமிழில்... ஆமாம் இப்ப என்ன மணி?"

"ஆறு முப்பத்தஞ்சு."

"ஒரு நிமிஷம் இரு. பிரஷ்ணம் பாக்கறேன், நீ வந்த இந்த நிமிஷத்தில் குளிகன சஞ்சாரமிருந்தால் இது விஷமிக்க வேண்டிய சமாசாரமே, இல்லைன்னா கவலைப் படாண்டா..."

எழுந்து போய் ஒரு ஓலைப் பெட்டியை சுமக்க மாட்டாது சுமந்து வந்தார் அந்த கிழட்டு மனிதர். அதனுள்ளே சோழிகள். அதில் கூடவே ஒரு யந்திரம் வரையப்பட்ட மரப்பலகை.

எடுத்து விரித்து அதன்மேல் சோழிகளை கைகளை கூப்பி நமஸ்கரித்து விட்டு விட்டெறிந்தார். பல சோழிகள் குப்புறவும் சில நிமிர்ந்தும் விழுந்தது. கூட்டியதில் நிமிர்ந்தது எட்டாகவும் குப்புற விழுந்தது எட்டாகவும் இருந்து அவரை மிரட்டியது.

கண்களில் அதிர்ச்சி பரவியது. கன்னத்து தசை நார் பரப்பு சுருங்கி தளதளத்து கோழிக் கொண்டை போல ஆடியது.

"என்ன நம்பூதிரி..."

"குளிகன் சஞ்சாரமிருக்கு... சனியின் பாதசாரம் வேறு. சாயா கிரகங்களான ராகு கேது தோஷம் வேற... அந்த ஜான்சன் மறிக்கப் போவது சத்யம். அது விதிப்பாடே! யாதொரு ஏவலோ பில்லியோ துஷ்டப் பிசாசோட செயல்பாடோ இல்லை..."

வேதநாராயண நம்பூதிரி விளக்கம் அச்சுதனை மிரட்டியது.

"நம்பூதிரி இது நடக்கான் பாடில்ல. நடக்கக்கூடாது. தங்கள் ஏதாவது செய்ய இயலுமோ?"

"முடியாது மோனே... எனக்கு மட்டுமல்ல யார் கிட்டேயும் அதற்கான சக்தி இல்லை. அந்த சக்கரவர்த்தி பரந்தாமன் சொன்னது வாஸ்தவமே..."

"பின்னே காத்து ரட்சிப்பதாகவும் சொன்னாரே அவர். எப்படி?"

"தெரியல... உயிர் நாள மதியம் ஒரு மணிக்கு பிரியணும். அதுவரைக்கும் ஜீவ சக்கரம் சுழற்சி இருக்கு. பின்னே அது சுழலுணும்னா அந்த நாராயணன் அனுக்ரஹிச்சால்தான் சாத்யம்..."



பாத்து நாராயண அனுக்ரகம் உண்டோ... சொல்லணும்."

"உண்டுன்னுதான் சொல்லணும் இல்லேன்னா இது குறிச்சு நீ பிரஸ்தாவிக்க மாட்டாய் அந்த சன்யாசியும் ஒப்புதல் தந்திருக்க மாட்டான்."

"சரி... அந்த சன்யாசி அதாவது சக்கரவர்த்தி பரந்தாமன் சத்யமான சன்யாசியா... இல்லை கள்ளச் சன்யாசியோ...?"

"அவன் சத்யமானவன். ஆனால் அவனது ஆதாரங்கள் கள்ளத்தனங்கள். ஒரு காலத்தில் என்னிடத்திலும் வித்தையறிய வந்தவன் அவன்."

"இப்போ நான் என்ன செய்யட்டும்?"

"ஒண்ணும் செய்யாதே. நான் ஒரு ரட்சை தரேன். அதை அந்த ஜான்சன் கைல கட்டு. தேவகருணை கிடைக்கலாம்."

"நல்லது..." கை நீட்ட வேதநாராயண நம்பூதிரி ஓலைப்பையில் இருந்தே ஒரு ரட்சையை எடுத்து நெற்றிமேல் வைத்து தியானித்து விட்டு தந்தார்.

வாங்கிக் கொண்டான்.

விழுந்து வணங்கிவிட்டு வெளியே வந்தான்.

ஒரு டாக்சி பிடித்தாவது சென்னை பயணப்பட்டுவிட வேண்டும். எவ்வளவு சீக்கிரமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு நல்லது என்கிற வேகம் காலைக் கவ்வியதோடு பிடரியையும் பிடித்து முன்னே தள்ளியது.

## 9

**'சரீரத்திலேயே பஞ்ச பூதங்கள் உள்ளன. ரகசியமாக ஒன்பது கிரகங்கள். இவை நடுவே**

இவற்றை இயக்குகின்றன. இதில் மாரக தசையின் போது விழும் கதிர்கள் இதய ஓட்டத்தை மெல்ல நிறுத்த எல்லா முயற்சிகளும் செய்யும். நாடிகள் கூட அதற்குண்டான வேகத்தில் துடிக்காது. விஞ்ஞானம் இதற்கு காரணம் முதுமை இல்லையேல் வியாதி அதுவுமில்லை செல்களின் செரிவின்மை எனும்.'

எல்லா வேலைகளும் முடிந்து விட்டது. ஸ்ரீநாத் கிளம்பத் தயாரானான். அதற்கு முன்பாக ஜான்சனின் உடல் நிலை பற்றி தெரிந்து கொள்ளும் ஆசை வந்தது.

எடிட்டர் வீரபாரதியின் செல் நம்பரைத் தொடர்பு கொண்டான். அவரும் காதில் பாய்ந்தார்.

"சார்... ஓர்க் ஓவர்."

"சரி நீ கிளம்பு."

"ஜான்சனுக்கு எப்படி சார் இருக்கு?"

"இருக்கு..."

"கவலைப்படாதீங்க சார்... ச.ப. எனக்கு வாக்களிச்சிருக்கார். ஜான்சன் பிழைச்சுடுவார்."

"உம்... பார்ப்போம்..."

வீரபாரதியின் குரலில் சுரத்தில்லை.

"எனக்கு நம்பிக்கை இருக்கு சார். அவருக்கு கருணை அதிகம்."

"சரி ஸ்ரீநாத் உன் பரந்தாம பஜனையை இத்தோட நிறுத்திக்கோ. அவரை கடவுள் சக்திதான்னு சொல்றதையும் நிறுத்திக்கோ. அவர் எப்படி ஒவ்வொரு விஷயங்களையும் முன் கூட்டியே சொல்றார்னு எனக்கு தெரிஞ்சு போச்சு..."



"அது தவசக்திதான்."

"வெளக்கெண்ணை. எல்லாம் மாந்திரீக தந்திரம்யா. கேரளா போகவேண்டியது. யாராவது ஒரு மாந்திரீகனை பார்க்க வேண்டியது அவங்ககிட்ட இருக்கற துஷ்ட சக்தி ஒண்ணை ஹயர் பண்ணிக்க வேண்டியது. இப்படித்தான்.

ஜான்சன் விஷயத்துல அந்த மனுஷன் புலிவாலைப் பிடிச்சுட்டார். அதை போக போக தெரிஞ்சுக்குவார்." அதற்குமேல் ஸ்ரீநாத்துக்கு அவரிடம் பேசத் தோன்றவில்லை.

தொலைபேசியை துண்டித்து விட்டு கிளம்பினான். நடக்க ஆரம்பித்தான்.

எதிலோ ஆரம்பித்த பேச்சு எங்கோ போய் எப்படி எப்படியோ ஆகிவிட்ட வருத்தம் நடையில் இருந்தது.

எதையும் நம்பாதவர் ஏதோ துஷ்டசக்திகளின் வேலை என்றாவது இறங்கி வந்திருக்கிறாரே...?

நடந்தபடி சட்டைப் பையில் கையை விட்டான்.

பர்ஸ் அகப்பட எடுத்து விரித்தான். அதில் ச.ப. சிரித்தார். 'ஸ்வாமி... நீங்கள் நிஜத்தில் யார்? எனக்கே குழப்பமாக இருக்கிறது' என்பது போல பார்த்தான். என்ன நினைத்தானோ மனது உடனேயே முழு நம்பிக்கைக்கு தாவியது.

'ஸ்வாமி... என்னை கைவிடாதீர்கள். ஜான்சன் இறந்தால் அதை விதி என்று நம்ப இப்பொழுது யாரும் தயாராக இல்லை. பிழைத்தாலும் உங்கள் அருளால் என்று கருதவும் ஒருவரும் தயாராக இல்லை. விஷயம் ஒரு மாதிரி திருகிக் கொண்டு விட்டது.

எது எப்படியோ உங்கள் தெய்வாம்சமும் பழுதுபடக் கூடாது. ஜான்சனும் பிழைத்தெழ வேண்டும். என்ன செய்யப் போகிறீர்கள்... எப்படி செயல்படப் போகிறீர்கள்?

-கேள்விகள் மனதில் பிதற்றலாய் பீறிட்டது. அழுகை கூட வரும்போல தோன்றியது.

விடிந்து விட்டது.

கிழக்கில் சூரியனும் ஆஜர்.

ஆஸ்பத்திரி வராண்டாவை விட்டு வீரபாரதி அப்படி இப்படி போகவில்லை.

ஆஸ்பத்திரியே ஆச்சரியப்பட்டது.

ஒரு துணை ஆசிரியனுக்காக ஒரு ஆசிரியர் இவ்வளவு கூடவா துடிப்பார்?

சிலருக்கு பெருமையாக இருந்தது.

ஜான்சன் மனைவி கூட சர்ச்சுக்கு போய்விட்டு வருவதாகச் சொல்லிவிட்டு போயிருந்தாள்.

எட்டிப்பார்க்கிறார்.

வீர நடைபோட்ட ஜான்சன் தீயில்பட்ட வாழை இலையாட்டம் கிடக்கிறான் படுக்கையில். மூக்கில் ஆக்சிஜன் குழாயின் ஊடுருவல்.

''சாரி ஜான்சன்... நீ இப்படி படுத்திருக்க நானும் ஒரு காரணம். கொந்தளிப்பான பிழைப்பு நம்ம பிழைப்பு. அதுக்கு இதயமும் ரத்தமும் சரியா ஒத்துழைக்கணும். இல்லேன்னா இப்படித்தான்...''

-அவர் கசிந்துருகும்போது செல்போனில் சிணுங்கல். காதில் பாய்கிறான் அச்சுதன்.

''சார் நான் அச்சுதன்... மெட்ராஸ்ல இருந்துதான் பேசறேன். வந்து கிட்டேயிருக்கேன்.''



''அச்சுதா என்ன இது... நீயே கிளம்பி வந்துட்டே?''

''காரணம் இருக்கு நேரில் சொல்றேன்.''

-செல்போனை முடக்கிவிட்டு சற்று பரபரப்பானார் வீரபாரதி. டீ சாப்பிட்டால் நன்றாக இருக்கும்போல தோன்றியது. கேன்டீன் எங்கே என்று தேடிப் பிடித்துப் போனார். டீயை வாங்கிச் சூப்பும்போது எதிரில் சக்கரவர்த்தி பரந்தாமன் படம் தெரிந்தது. இங்கேயுமா?

அதற்கு மாலை ஊதுபத்தி என்கிற அமர்க்களம் வேறு... டீயை சூப்பும்போதே பார்வை படத்தை வெறித்தது. ஊரையே கெடுத்து குட்டிச்சுவராக்கி வெச்சுருக்கீங்கய்யா... திரும்பினார் எதிரில் ஒரு ஆட்டோ. அதில் முருகன் துணை எனும் வாசகம். எரிச்சலிடம் இரட்டைப்பெருக்கம். ஒரு இந்தியனும் துணையில்லாமல் இயங்க முடியதாக்கும்? கனன்ற சிந்தனையோடு காசை விட்டெறிந்துவிட்டு வெளியில் வந்தார்.

பேப்பர் பார்க்கும் ஆசை வந்தது.

பத்திரிகையாளனின் கட்டாயக்கடமை ஆயிற்றே.

பெட்டிக்கடையை தேடியது பார்வை. அகப்பட்டது அதுவும். முகப்பில் போஸ்டர்களின் வவ்வால்தனம். பார்த்தபடியே நான்கு தினசரிகளை வாங்கி கக்கத்தில் இறுக்கிக் கொண்டு நடந்தார்.

தூக்கம் விழிப்பு-மனச்சலனம்-எல்லாவற்றின் காரணமாக கண்கள் மேல் கரிப்பு.

எதற்கும் ஜான்சனை ஒரு பார்வை பார்க்கும் ஆசை வந்தது. போய் எட்டிப் பார்த்தார்.

மானிட்டரில் மழைச் சொட்டு வளைவுகளாட்டம் ஒளிக்கோட்டின் போக்கு.

ஜான்சன் அசையாமல் கிடந்தான்.

பரிதாபம் நிறைய தந்தான்.

வெளியே வந்தார். அச்சுதனின் ஆட்டோவும் அவனது பிரவேசமும் அப்பொழுது நிகழ்ந்தது.

''சாரே...''

''வா...வா...''

''எந்தா... எப்படி இருக்கு ஜான்சனுக்கு?...''

''இருக்கு... முன்னேற்றமும் இல்ல. பின்னேற்றமும் இல்ல.''

''சார் நான் வேதநாராயண நம்பூதிரியை சோதிச்சேன். பிரஷ்ன ஜோதிடம் பார்த்து இது விதிதான்னு பறைஞ்சார். அவர் சொன்னால் சரியாயிருக்கும்...''

''அப்ப அந்த ச.ப' உளறினது உண்மைதானா?''

''ஆமாம்... ச.ப' கூட நல்ல மனுஷன்னு பறைஞ்சார்.''

''நல்ல மனுஷன் எதுக்கு கேரளா போகணும்.''

''நான் சோதிச்சு... அங்க அவருக்கு ஒரு பிரசங்கம்.''

''பிரசங்கம்கற சாக்குல நீ சொன்ன மாதிரி, என் வாத்யார் சொன்னமாதிரி தந்திர வேலை எதாவது பாக்க இருக்கும்...''

''என்ன இது... நீங்கள் இது எதையுமே நம்பாதவர் இப்ப போய் இப்படி பேசறீங்களே. வாங்க முதல்ல நான் ஜான்சனை பாக்கணும்.''

''எதுக்கு?''

''வேதநாராயண நம்பூதிரி ஒரு ரட்சை தந்துருக்கார். அதை கட்டணும்.''



''இதை கட்டினா எமன் வர மாட்டானாக்கும்'' ''நதி மூலம் ரிஷி மூலம் எதுலையும் ரிசல்ட்ட பார்க்கணும். நோக்காண்டா... வரு சாரே...''

-அவன் அவர் கைகளை பிடித்துக் கொண்டு இழுத்துச் சென்றான். படுக்கையில் நெருங்கி ரட்சையைக் கட்டினான்.

அதற்கு முன்பே ஒரு அதிசயம் போல ஜான்சனிடம் முன்னேற்றம் ஏற்பட்டு கைகால்களில் நல்ல அசைவு தெரிந்தது.

''யோவ் என்னய்யா... உன் ரட்சைக்கும் சக்தி இருக்கு போல...''

''பின்னே...''-அச்சுதனிடம் பெருமிதம்.

வெளியே வருகின்றனர். நின்று நடந்ததில் காலில் வலிவேறு. பேசாமல் போய் காரில் உட்காரலாமா என்று தோன்றவே காரை நோக்கிச் சென்றார்.

காரில் ஏறி உட்கார்ந்தார் வீரபாரதி.

''ரொம்ப நன்றி அச்சுதா. ரட்சைக்காக இல்லே இது. உன் முயற்சி, மனிதாபிமானம் இதுக்காக...''

அச்சுதன் சிரித்தான்.

''பேடிக்கண்டா... ஜான்சன் மூச்சு பிழைக்க வழி இருக்குன்னும் நம்பூதிரி பறைஞ்சது. எப்படின்னு தான் தெரியல...''

''ஹார்ட் அட்டாக் வந்தவங்க திரும்ப பிழைக்கற தில்லையா. அப்படி இருக்கலாம். எதுவா இருந்தாலும் சரி ஒரு மணிதான் கெடு. அப்புறம் இருக்கு அந்த சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு...''

அந்த ஆளோட ஆதி அந்தத்தை விடபோறதில்ல. கேரளா போய் யாரெல்லாம் இதுக்கு உடந்தை அது என்ன வித்தைங்கறதுல இருந்து எல்லாம் பாக்கப் போறேன்...''

வீரபாரதி மனது சமாதானமே ஆகாமல் பேசிக் கொண்டிருந்தது. நடுநடுவே அந்த ஊமைக்குழந்தையின் பிம்பம் தோன்றித் தோன்றி மனதை மிரட்டியது. கெடிகாரத்தை பார்த்தார் மணி ஏழேகால். நியூஸ் கேட்கும் ஆசை தோன்றவே உள்ளேயே ரேடியோவை திருகினார்.

காதில் ஒரு சீர் பெற்ற குரல்... கார்கில் சண்டை... வாஜ்பாய் பேச்சு... அரசியல் கூட்டணி... சு. சாமிக்கு ஜெ கொடுத்த அல்வா... என்று சரமாரியாக போய் விட்டு இறுதியாக ஒரு சேதியை சொன்ன போது சுரீர் என்று இருந்தது வீரபாரதிக்கு...

'பிரபல ஆன்மிக பிரமுகருக்கும் தெய்விக மனிதன் என்று போற்றப்படுபவருமான ஸ்வாமி சக்கரவர்த்தி பராந்தமன் இன்று காலை கேரளத்து நதி ஒன்றில் அடித்துச் செல்லப்பட்டார்.

நதியில் நீராட அவர் வந்த போது இந்த விபத்து நேரிட்டதாக தெரிகிறது. அவரது உடலை பக்தர்களும் போலீசாரும் தேடி வருகின்றனர்.

இவர்தான் இன்னும் நூற்றாண்டுக்கு இந்த உலகில் வாழ்ந்து சிறப்பு செய்வேன் என்று கூறியிருந்தார்.

இவரது மறைவு ஆன்மிக உலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்று ஸ்வாமி அருளானந்தர் கூறியுள்ளார்.

ஆயினும் அவர் நிச்சயம் வருவார். அவர் மரணிக்க மாட்டார் அவருக்கு மரணமில்லை என்று அவரது பக்தர்கள் பலர் கூறினர்.



வீரபாரதிக்கு முதுகுத்தண்டில் கந்தகக் குச்சியை தேய்த்த மாதிரி இருந்தது.

"யோவ் அச்சுதன்... பாத்தியாய்யா... நம்ம ஜான்சனுக்கு மரணநேரம் சொன்ன மனுஷனோட நிலையை...''

"ஊருக்கெல்லாம் பலன் சொல்லுமாம் பல்லி. ஆனா அது தான் விழுமாம் கழனிப்பானையில் துள்ளி... அப்படி இல்ல?''

-அச்சுதனும் அதை கேட்டு வாய் பிளந்தான்.

"சாரே... எல்லாமே வல்லிய புதிராக இருக்கு...'' என்று மலையாளமும் தமிழுமாக கலந்தடிக்கிறான்.

வீரபாரதிக்குள் ஒரு புதிய தெம்பு பெருக்கெடுத்திருந்தது. தன்னையே அறியாதவர் சொன்னதற்காகப் போய் நாம் மிகவும் கவலைப்பட்டு விட்டோமே என்று...

ஜான்சனும் நிச்சயம் பிழைத்து விடுவான் என்று தோன்றியது.

அந்த சந்தோஷத்தோடு காரை கிளப்புகிறார்.

"எங்க சார்?''

"வீட்டுக்கு தான்... வா போய் குளிச்சிட்டு சாப்புட்டு வருவோம். ஜான்சனுக்கு ஒண்ணும் ஆகாது!''

## 10

'பூமி மிகச் சிறியது. கடவுள் தன் கையெழுத்தின் போது வைக்கும் ஒரு சிறு புள்ளியளவு கூட அது கிடையாது. லட்சக்கணக்கான நடசத்திர மண்டலங்கள் கிரங்கள் அவற்றின் இயக்கங்களின்

முன் பூமியும் அதில் நடக்கும் சில விந்தைகளும் காலகாலமாக நடப்பவைதான்.'

மணி ஒன்று!

ஜான்சன் அருகில் வீரபாரதி அச்சுதன் அவன் மனைவி எல்லாரும். நடுநடுவே உயிர்ப்பிப்பது போல எழப்பார்த்த ஜான்சன் கடந்த அரை மணியாக ச.ப' சொன்னபடி ஆகிவிடுவான் போல் தெரிகிறது.

ஒரு பக்கம் சொன்னவர் போய்விட்டார்.

சொல்லப்பட்டவனும் போய் விடுவானோ?

ஓடிவருகிறான் ஸ்ரீநாத்தும்...

அவன் வரவும் மானிட்டரில் ஒளிப்புள்ளி அறுந்து போகவும் சரியாக இருந்தது.

டாக்டர் நிமிர்ந்தார்.

''எக்ஸ்ட்ரீம்லி வெரி சாரி...'' என்றார்.

வீரபாரதி முகத்தில் ஈயாடவில்லை.

ஜான்சன் மனைவி அழுது புலம்புவது காதில் கேட்கிறது.

கர்ண கடூரமாக இருக்கிறது.

சமாதானம் செய்யவே முடியவில்லை.

வீரபாரதி ஸ்ரீநாத்தை பார்க்கிறார்.

''போய்யா நீயும் உன் பக்தியும். அந்தாளும் இல்லை. இவன் பிழைக்கவுமில்லை. எல்லாம் போயிடிச்சு... என் ஜான்சான் போய்ட்டான். ஒரு அருமையான மனுஷன் போயிட்டான்யா...'' வீரபாரதி கதறினார். கத்தரித்த நர்சின் குரல்.

''சார்...''



''என்ன?''

''ஹி ஈஸ் அலைவ்...''

''எப்படி?''

''வந்து பாருங்க...''

எல்லாரும் ஓடினார்கள். மானிட்டரில் திரும்பவும் ஒளிப்புள்ளிகளின் ஓட்டம். மார்பில் இதயத்திடம் மெத்து மெத்தென்ற சத்தம் வீரபாரதிக்கு சிலிர்ப்பாக இருந்தது.

''சார் நான் சொல்லலை... ச.ப' கைவிடலை. சார் ச.ப' கைவிடலை...'' மெய்சிலிர்த்தான். அதே சமயம் ஜான்சனும் கண் திறந்தான். எல்லாரையும் பார்த்தான். பின் மெல்லிய குரலில் சொன்னான்.

'நான் ஆற்றோடு போகவில்லை. வந்துவிட்டேன். எனக்கு இன்னும் நூறாண்டு பணி உள்ளது! ஸ்ரீநாத்... உனக்கு தந்த வாக்கினையும் காப்பாற்றிவிட்டேனப்பா! மகிழ்ச்சி தானே?'

ஸ்ரீநாத்துக்கு மயக்கமே வந்துவிட்டது.

ஜான்சனின் அந்த புத்தெழுச்சி மாறுபட்ட பேச்சு பார்க்கும் பார்வை எல்லாமே எல்லாரையும் புரட்டிப் போட்டு விட்டது.

டாக்டர்களும் நர்ஸ்களும் ஒருவரை ஒருவர் வியக்கின்றனர்.

வீரபாரதி கைகட்டி தாடையை தேய்த்துக் கொண்டு அவனைப் பார்க்கிறார்.

ஸ்ரீநாத் மட்டும் சிலிர்ப்பின் உச்சத்தில் இருந்தான்.

''சார் நான் சொல்லலை... நான் சொல்லலை. ஜான்சனுக்கு இப்ப கிடைச்சிருக்கறது மறு ஜென்மம் சார். அதே சமயம் மகத்தான ஜென்மம்.

கேரளாவுல ஆத்தோட போயிட்ட ஸ்வாமி சக்கரவர்த்தி பரந்தாமன் இப்ப ஜான்சன் உடம்புக்குள்ள புகுந்து உயிர்த்தெழுந்துட்டார்.

எதையும் நம்ப மறுத்த ஜான்சன் தானே இப்ப அந்த நம்பிக்கை அனுபவங்களின் வடிவம் ஆயிட்டான்.

ஸ்வாமி... நான் உங்கமேல வெச்சிருந்த நம்பிக்கையை நீங்க வீண் போக்கல. அதையும் காப்பாத்தி உங்க பழைய வடிவத்துக்கும் ஒரு இளமையை திரும்பக் கொண்டு வந்துட்டீங்க... சந்தோஷம் ஸ்வாமி-ரொம்ப சந்தோஷம்...''

ஸ்ரீநாத் ஜான்சனை நெருங்கி கைகளை கட்டிக் கொண்டு பேசி முடித்தான்.

டாக்டரும் வீரபாரதியும் பார்த்துக்கொண்டே நிற்க ஜான்சன் ச.ப' எப்படி கைகளை உயர்த்தி ஆசீர்வதிப்பாரோ அதைப்போல ஸ்ரீநாத்தை பார்த்து ஆசீர்வதிக்கிறான்.

அப்பொழுது எல்லாரையும் ஒதுக்கித் தள்ளிக் கொண்டு முன் வந்தாள் ஜான்சனின் மனைவி ஷிலா. கூடவே அவனது குழந்தை இருவரும் விம்மலோடும் அவன் எதிரில் வந்து நின்றனர். ஜான்சன் இருவரையும் பார்த்தான். கைகளை உயர்த்தி ஆசிர்வதித்தான்.

''என்னங்க... நல்லாயிட்டீங்களா. அது போதுங்க... அது போதுங்க...'' என்றாள் அவள் விசும்பலோடு.

''நான் எப்பொழுதுமே நன்றாயிருப்பவன் தானே... எனக்கு என்ன ஆகிவிட முடியும். என்னை யார் என்ன செய்துவிட முடியும்?'' அவன் கேள்வியும் அந்த தூய தமிழும் அவளுக்கு வியப்பை தந்தது. மலங்க மலங்கப் பார்த்தாள்.

வெளியே சென்று நிற்கத் தொடங்கினார் வீரபாரதி. கூடவே டாக்டரும்.



''என்ன வீரபாரதி... என்ன சொல்றதுன்னே தெரியலியா?'' ஆமோதிப்பு வீரபாரதியின் முகத்தில்.

''எனக்கும் இது புது அனுபவம்தான். என் ஆஸ்பத்திரியில செத்துட்ட ஒருத்தருக்கு உயிர் வந்துருக்கறது இது இரண்டாவது தடவை.

ஏற்கனவே ஒருமுறை ச.ப,'வோட பக்தர் ஒருவர் இறந்து அவர் அருளாலே பொழைச்சிருக்காரு. இப்ப இரண்டாவது...''

''அது சரி... வந்துருக்கறது ச.ப.' வாச்சே நீங்களும் அவரோட பக்தர். விழுந்து கும்பிடலை...?''

''நினைச்சேன். இப்படி கேப்பீங்கன்னு நினைச்சேன் எனக்கு என்னவோ இது ச.ப.'வா இருக்கும்னு தோணலை.''

''என்ன டாக்டர் இது... பேச்சு பாவனை எல்லாம் அப்படியே இருக்கே?''

''இருக்கலாம்... சில சமயம் பேஷண்ட்ல வியாதியின் போது உள்ளது உண்டு. சிலர் என்னை எமதூதர்கள் கையை பிடிச்சு இழுத்துக்கிட்டு போனாங்கன்னுலாம் சொல்லியிருக்காங்க. ஆகையால இது புத்தி பேதலிப்பா கூட இருக்கலாம்னு ஒரு பக்கம் நினைக்கறேன்.''

''பேதலிப்பா?''

''ஆமாம்... நிறைய வாய்ப்புகள் இருக்கு அதுக்கு. ஜான்சன் ச.ப' நினைப்பா இருக்கும்போது வந்ததுதானே ஹார்ட் அட்டாக். அவர் சொன்ன விதி முடியப் போற துங்கற விஷயத்தால வந்த விபரீதம்னுகூட சொல்வேன்.

பகல் பொழுதில் நம் பார்வைல பட்டு மனசை பாதிச்ச விஷயங்கள் இரவுல கனவுல வேறு வேறு வடிவத்துல

வெளிப்படும். அந்த மாதிரி எண்ணங்களோட அழுத்தம் இப்படி ஏன் வெளிப்படக் கூடாது...''

''ரொம்ப ஆச்சரியமா இருக்கு டாக்டர் உங்க பேச்சு. இந்த விஞ்ஞான பார்வை ஏன் ஜான்சனை நான் அட்மிட் பண்ணும் போது இல்ல?''

''எப்பவும் இருக்கும் அது இடத்திற்கும் விஷயத்திற்கும் தகுந்த மாதிரி வேலை செய்யும். இப்ப இவ்வளவு பேசறதால நான் ச.ப' பக்தன் இல்லேன்னு அர்த்தமில்லை. என்வரைல அவர் மரணமில்லாதவர். ஒரு ஆற்று வெள்ளமெல்லாம் அவரைக் கொண்டு போய் உயிரை வாங்க முடியாது.''

''அப்படின்னா...?''

''ச.ப.' உயிரோட எங்கியோ இருக்கார். இங்க ஜான்சன் அவர் பாதிப்புல தன்னையே ச.ப.'ன்னு நினைச்சு பேசிக்கிட்டிருக்கான்...''

டாக்டரின் விளக்கப்படியும் இருக்குமோ? கூடவே பொறி தட்டினார் போல ஒரு கேள்வி இருக்க முடியாது என்றது.

ஏனென்றால் ஹார்ட் அட்டாக்கில் விழுந்த ஜான்சனுக்கு ச.ப.' கேரளத்து ஆற்று வெள்ளத்தில் போனதே தெரியாதே. அப்படி இருக்க எப்படி இங்கே உயிர்மூச்சு ஒழுங்குபட்ட நிலையில் அத்தனைச் சரியா எழுந்து நான் மரணமில்லாதவன். ஆற்று வெள்ளத்தில் போனாலும் திரும்ப வந்து விட்டேன் என்பது போல பேசினான்?

அதை கேள்வியாக்கும்போது டாக்டரும் ஆமோதிப்போடு தலையை ஆட்டி கேட்டுக் கொண்டார்.



குழம்பிப் போனார். சடாரென்று தன் அறைக்குள் நுழைந்து டேபிள் கண்ணாடிக்குள் அடைபட்டு கிடக்கும் படத்தைப் பார்த்து கைகளைக் கூப்பி ''ஸ்வாமி... இது என்ன குழப்பம் எனக்கு ஒண்ணும் புரியல. நீர்தான் புரிய வைக்கணும்.'' என்று பலமான முணுமுணுப்போடு வேண்டிக் கொண்டார்.

வீரபாரதிக்கு எல்லாமே புதிராக இருக்கும்போது ஜான்சனின் அறையில் இருந்து அச்சுதன் ஓடி வந்தான்.

''சார்... சார்...''

''என்ன அச்சுதா... என்னாச்சு?''

''ஜான்சன் மயக்கமாயிட்டான். எகெய்ன் ப்ராப்ளம்?''

-அடுத்த நொடியே டாக்டரும் வீரபாரதியும் அங்கே ஓடினார்கள்.

ஜான்சன் படுக்கையில் தூங்குவது போல கிடந்தான். இடப்பக்கமாக ஸ்ரீநாத்தும், வலப்பக்கத்தில் அவன் மனைவியும் குழந்தையும் நின்று கொண்டு விதிர் விதிர்ப்போடு பார்த்தனர். டாக்டர் பல்ஸ் பார்த்துவிட்டு மார்பின் மேல் காதை வைத்துப் பார்த்தார். இதயம் இயங்குவதை சப்தம் காட்டிக் கொடுத்தது. நிமிர்ந்தார்.

வீரபாரதி பதற்றத்தோடு கேட்டார்.

''என்ன டாக்டர்... திரும்பவும்...''

''நத்திங்... நத்திங்...'' என்றபடி எல்லாரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு ஆக்சிஜனை எதற்கும் இருக்கட்டும் என்று அப்ளை செய்யத் தொடங்கினார்.

சக டாக்டர்கள் வந்து குழுமி நடந்த சகலத்தையும் பேசி ஆச்சரியமாச்சரியங்களுக்கு உள்ளாகத் தொடங்கினர்.

மருத்துவ உலகம் நிறைய விந்தைகளைப் பார்த்திருக்கிறது.

இறந்துவிட்டதாகக் கருதி சுடுகாடு வரை தூக்கிச் சென்ற ஒருவர் சிதையில் தீ பட்டதும் சூடு தாளாமல் தூங்கி எழுந்தவர் போல எழுந்து ஓடி வந்த நிஜங்களும் பல உண்டு.

மார்ச்சுவரியில் பிணங்களோடு பிணங்களாக கிடந்தவர்களும் அவர்களை கூறு போடத் தொடங்கும் போது கண் விழித்து என்னை எப்படி இங்கே கொண்டு வரப் போயிற்று? என்று கேட்ட கதைகளும் உண்டு.

ஜான்சன் விஷயம் இது எந்த ரகமாகவும் இல்லாமல் புது விதமாக இருக்கிறது.

புதிர் மூட்டையாக கனக்கிறது.

ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாகப் போட்டுக் குழப்பி எடுக்கிறது.

திரும்பவும் வார்டுக்கு வெளியே கண்ணீர் சிந்திக் கொண்டு நிற்கிறாள் ஷீலா. அருகில் ஆறுதலாக வீரபாரதி.

"சார்... அவர் இப்படியெல்லாம் பேசி நான் கேள்விப் பட்டதேயில்லை. எனக்கு எல்லாமே ஆச்சரியமா இருக்கு. எங்களை அவர் மூணாம் மனுஷர் மாதிரிதான் பார்த்தாரு. அவருக்கு உண்மையில என்ன சார்...? அவர் பொழைச்சுடுவார்தானே?"

-வீரபாரதியை ஷீலா அரற்றி எடுக்க ஆரம்பித்தாள். அச்சுதனுக்கே அதைப் பார்க்க என்னவோ போல் இருந்தது. நடுவில் ஓசைப்படாமல் வீரபாரதியின் தோளைப் பற்றி தனியே அழைத்தான்.

"என்ன அச்சுதன்?"



"சார் நீங்க டாக்டரோட வெளியே போயிருக்கும் போது ஜான்சன் ஐ மின் ச.ப.' என்னைக் கூப்பிட்டு ஒரு விஷயம் சொன்னாரு."

"அவர் உடம்பு தலைச்சேரி குடவல்லிப் புழா ஆத்து வெள்ளத்துல அடிச்சிட்டுப் போய் கடல்ல கலக்கற இடத்துல ஒரு புதருக்குள்ள இருக்காம். அதை யாருக்கும் தெரியாம என்னை பத்திரப்படுத்தச் சொன்னார்..."

"என்னய்யா சொல்றே... இத சொன்னது யார்?"

"ஜான்சன். அதாவது ஜான்சன் உடம்பு மூலமா நம்ம கூட பேசற சக்கரவர்த்தி பரந்தாமன்."

"அச்சுதா... என்ன நீ மேலும் குழப்பறே. டாக்டரே இது ஜான்சனோட உளறலா இருக்கலாம். மன அழுத்தமா இருக்கலாம். இது ஒரு வித Split Fash னு சொல்றார்ப்பா."

"இல்ல சார். படிச்ச கூட்டம் அப்படித்தான் புது புது பேர் வெச்சு எதையாவது சொல்வாங்க. நான் போய் பாக்கறேனே?"

"சரி எதுக்குன்னு சொல்லலையா?"

"சொல்லலை. போய் பாக்கறேன். ஆப்ஷன்ஸை எப்பவும் விடக்கூடாது. அட்டெண்ட் பண்ணி பார்த்துடணும்."

"என்னவோ போ... நான் ஜான்சனை இந்த ச.ப' விஷயத்தை நோண்ட அனுப்பிச்சது தப்போன்னு தோணுது. ஒரு பக்கம் இன்டர்நெட் வாழ்க்கை-மறுபக்கம் இப்படி மாயாபஜார். என்ன எழவுய்யா இது?"

-வீரபாரதி கொந்தளிக்கும் போது எமர்ஜென்சி வார்டில் இருந்து டாக்டர்கள் சலசலப்போடு வெளியே வந்தனர்.

'வீரபாரதி... வீரபாரதி...' என்று சீஃப் டாக்டர் அழைப்பதும் கேட்டது.

ஓடினார் வீரபாரதி.

ஜான்சன் விழித்தபடி இருந்தான். அவரைப் பார்த்து "சார்..." என்றான்.

"ஜான்சன்..."

"சார்... சாரி சார் உங்களை எல்லாம் ரொம்பச் சிரமப்படுத்திட்டேன் போல இருக்கு..."-என்றான். அதற்குள் உள் நுழைந்த மனைவி குழந்தைகளை பார்த்து ஷீலா... மரியா என்று உருகினான். இருவரும் நெருங்கிட அப்படியே படுத்த நிலையில் அணைத்துக் கொண்டான். மகள் மரியா அவன் அருகே அமர்த்தப்பட்டாள். அவன் கரங்கள் அவள் தலையை வருடி விட்டன.

"என்ன ஜான்சன் ரொம்ப பயமுறுத்திட்டியேப்பா. முந்தி கண்விழிச்சப்போ நான் தான் சக்கரவர்த்தி பரந்தாமன்னு சொன்னே... இப்போ இயல்பா பேசறே?"

"அப்படியா... எனக்கு எதுவும் தெரியலையே சார். அப்படியா பேசினேன்...?"

"நல்லாருக்குபோ. எனக்கு ஒண்ணுமே புரியல. ஒரு கணம் ஆடிப் போயிட்டேன். எனிவே இப்பவாவது நல்ல விதமா பேசறியே... தேங்க் காட்!"

"சார் மணி என்ன இப்ப?"

"மணி... மணி... இரண்டு பத்து!"

"ஒரு மணிக்கெல்லாம் செத்துடுவேன்னு சொன்ன அந்த சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு உடனே ஒரு போன் போடுங்க சார். நான் பேசறேன்..."

"வேண்டாம் உணர்ச்சிவசப்படாம இரு. ஸ்ட்ரெய்ன் பண்ணாதே. அதை பிறகு பார்த்துக்கலாம்."



"என்ன சார் ஸ்ட்ரெய்ன்... நான் நல்லா எனர்ஜெடிக்காதான் ஃபீல் பண்றேன்."

"புடலங்கா. நேத்து மதிய சாயங்காலத்துல இருந்து இப்ப வரை நீ எங்களை படுத்தினபாடு எங்களுக்குத்தான் தெரியும். டேக் ரெஸ்ட் ஃபர்ஸ்ட். ச.ப' பத்தி நீ இனி நினைச்சுட பார்க்கக் கூடாது..."

-வீரபாரதி உணர்ச்சி ததும்ப பேசிவிட்டு வெளியே வந்தார். சீஃப் டாக்டரும் அச்சுதனும் கூட சேர்ந்து வெளியே வந்தனர்.

வெளியே டாக்டர்கள் கூட்டம் ஜான்சன் விஷயம் பற்றிய ஒரு பெரிய சர்ச்சையில் இருந்தது.

"நான் சொன்னது சரியா போச்சா வீரபாரதி. ஜான்சன் மென்டல் ஸ்ட்ரெஸ்லதான் முன்ன கண்விழிச்சப்ப அப்படி பேசியிருக்கான்."

"என்ன சார் மென்டல் ஸ்ட்ரெஸ், ச.ப.' ஆத்தோடு போன விஷயம் ஹவ் ஹி வாஸ் நோ? இட் ஈஸ் நாட் ஸ்ட்ரெஸ் ஆர் எனி அதர் டைப் ஆஃப் டிசீஸ். இட் ஈஸ் பியூர்லி ச.ப'ஸ் திருவிளையாடல்.

தன் சக்தியை புரூஃப் பண்ண அவர் நடத்தின திருவிளையாடலே தான்.

"இஃப் யூ ஹேவ் எனி டவுட் அவர் சொன்ன அந்த பிளேசுக்கு போனா நாம நிச்சயம் அவர் பாடிய பாக்கலாம்."-அச்சுதனோடு ஸ்ரீநாத்தும் சேர்ந்து பேசி வக்காலத்து வாங்க அரைமனதாக வீரபாரதி தலையை அசைத்து போய் பார்த்து வாருங்கள் என்றார். பின் என்ன நினைத்தாரோ தானும் வருவதாகக் கூறி அவர்களுடன் கிளம்பத் தயாரானார்.

# 11

'மூக்காலும் வாயாலும் சுவாசிப்பதைப் பற்றித்தான் உலகமறியும். ஆனால் நமது குறியாலும் நாம் முயன்றால் சுவாசிக்கலாம்.

சக்தி வழிபாடு புரியும் சாக்தர்கள் இந்தக் கலையில் வல்லவர்கள். இவர்கள் புணர்ச்சியின் போது தங்கள் விந்தினை வெளியே விடுவது போல் விட்டு பெண்விந்தோடு சேர்ந்து பின் உள் இழுத்துக் கொண்டு விடுவர்.

இந்த யோகம் புரிபவர்களுக்கு உடம்பிலிருந்து உயிரைப் பிரிப்பது, கூடுவிட்டு கூடுபாய்வது எல்லாமே சாதாரண விஷயங்கள். ஆனால் இதற்காக மனதையும் உடலையும் அடக்க எஃகுப் பயிற்சி பெற்றாக வேண்டும். அது கோடியில ஒருத்தருக்கு மட்டுமே சாத்தியம்.'

அந்த கார் கேரள மலைத்தலத்தில் பயணத்துக் கொண்டிருந்தது. செம்மண் கரளை பூமி. பாக்கும் தேக்கும் பார்க்குமிடங்களெல்லாம் தெரிந்து பச்சை கொட்டியது.

உள்ளே தீவிர சிந்தனையில் இருந்தார் வீரபாரதி.

"என்ன சார்... எவ்வளவு தான் நிதர்சனமா விஷயங்கள் நடந்தாலும் அறிவு மறுபக்கத்துல அது உண்மையா இருக்க வழியில்லை வழி இல்லைன்னு சொல்லுதுல்ல..." அச்சுதன் பேச்சை தொடங்கினான்.

"ஆமாம் அச்சுதன். அதுதான் உண்மை."



"அந்த உணர்ச்சி உண்மையா இருக்கலாம். எல்லாம் படிச்சதோட பாதிப்பு. விஞ்ஞான பழக்கத்தால வந்த பாதிப்பு..."

"அதுல தப்பென்ன?"

"நிறைய இருக்கு சார். இந்த விஞ்ஞானம் மட்டும் எப்பவும் நிதர்சனம் நிதர்சனம்னு அலையும். இந்த ராமர் பிள்ளை பெட்ரோலை எடுத்துக்குங்க. அது பெட்ரோல் இல்ல. சம்திங் ஏதோன்னு சொல்லி ஒதுக்கிடலை?"

"போகட்டும் அது பெட்ரோல் இல்லாமலே... பட் அது எரிஞ்சதில்லே? அது ஒரு எரிபொருள். இந்த தேசத்துக்கு அது தேவைன்னு ஒத்துக்கலாம்ல?"

"நீ என்ன சொல்றே?"

"நம்ம மெய்ஞான விஷயங்கள் முன்னே விஞ்ஞான விஷயங்கள் சுண்டைக்காய்."

"டேய் போய்கிட்டிருக்கறது ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பான கார்ல. போட்டுக்கறது ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பான காஸ்ட்லி சட்டை. நீ வேலை பாக்கறதும் அதோட தொடர்புள்ள ஒரு மீடியாவுல. நடுவுல இது சுண்டைக்காயா?"

"ஆமாம்... இவ்வளவு இருந்தென்ன பிரயோஜனம்? ஒரு நெல்மணியை சைன்ஸ் க்ரியேட் செய்யுமோ?"

"வேண்டாம் அச்சுதன். இந்த மாதிரி அபத்தமான கேள்விய நீயும் கேட்காதே. போதும் உன் மெய்ஞான ஜால்ரா. பேசாம வா. அந்த உடம்பு கிடைக்குதான்னு பார்ப்போம்."

"கிடைச்ச பின்னே என்ன செய்வீர்கள் சாரே? ச.ப' வாக்கு சத்யவாக்குன்னு ஒப்புதல் தருமோ நீங்கள்..."

''கிடைக்கட்டும். பிறகு பார்க்கலாம்.''

''கிடைக்கும் சார். நிச்சயம் வீண் போகாது. உங்களுக்கு இன்னும் ஏன் சார் இத்தனை சந்தேகம் ச.ப.' சொன்ன எது இந்த நிமிஷம் நடக்கல...?'' இது ஸ்ரீநாத்.

''நினைச்சேன். நீ இன்னும் வாயைத் திறக்கலைன்னு நினைச்சேன். ஆரம்பிச்சுட்டியா...''

''பின்ன என்ன சார். எந்த ஒரு விஷயத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டு சார். ஜான்சன் விஷயத்துல அது விழுந்தாச்சு ச.ப.'வும் காரணமில்லாம அவர் உடம்ப பத்தி நம்மகிட்ட சொல்லல. இதன் மூலமா இந்த உலகத்துக்கு அவர் எதையோ சொல்ல நினைக்கறார்.

சில உண்மைகளை கண்ணால பார்த்து, காதால கேட்டும் புரிஞ்சுக்க மறுத்தா நாம கண் இருந்தும் இல்லாதவங்க ஆயிடுவோம் சார்...''

ஸ்ரீநாத் கொந்தளித்தான். நடுவில் அச்சுதன் டிரைவரிடம் ஏதோ சொல்ல அவன் ரேடியோவை திருப்பினான். பாடல் ஒன்று காதில் விழுந்தது. ஓடும் காருக்குள் ஒரு காற்றில் கரைந்து ஓடவிடாத இசை வடிவம்.

ரசித்தார் வீரபாரதி.

அப்படியே ''இந்த மாதிரி எளிமையா புரிஞ்சுக்க முடிஞ்ச விஷயமா நம் வாழ்க்கை பற்றின விஷயங்கள் இல்லையே ஸ்ரீநாத். அதை யோசிச்சியா நீ.'' என்றார்.

''எந்த மாதிரி சார்...?''

''இந்த ரேடியோ மாதிரி... இந்த காத்துல அதோட அலைவரிசை இருக்கு. அதை ட்யூன் பண்ணும்போ போது பாக்ஸ்ல இருக்கற விஷயங்கள் அதை ரீசிவ் பண்ணி கன்வெர்ட் பண்ணி நமக்கு தேவையான அளவு சவுண்ட்டோட கொடுக்குது. சுலபமா புரிஞ்சுக்க முடியுது. எப்பவும் எங்கேயும் இந்த ரேடியோ சிஸ்டம் யாரையும் குழப்பறது இல்லை. மாறுவதும் இல்லை. ஆனா இந்த ஆவி உயிர் சமாசாரங்கள் அப்படியா? அவற்றோட அனுபவங்கள் எல்லாமே நிதர்சனமாவே இல்லையே...''

''நிதர்சனமா இல்லையா? நோ சார்... ஜான்சன் ச.ப' மாதிரி பேசினானே. அது போதலையா?''

''அதை ஸ்ட்ரெஸ்னாலையும் கூட இருக்கலாம்கறாரே டாக்டர்.''

''என்ன சார் நீங்க... ஜான்சனுக்கு ச.ப. ஆத்தோட போனது எப்படி தெரியும்?''

''அந்த ஒரு கேள்விதான் என்னை இவ்வளவு தூரம் இழுத்துவிட்டு வந்துருக்கு. ஜான்சன் சொன்ன மாதிரி அதாவது ஜான்சன் ச.ப.' மாதிரி வந்து பேசினப்போ சொன்ன மாதிரி உடம்பு இருக்கிற இடம் தெரிஞ்சிடட்டும் அப்ப ஒத்துக்கறேன் விஞ்ஞானம் சுண்டக்காய்னு... அப்ப ஒத்துக்கறேன் ச.ப.' நிஜமாலும் இந்த உலகத்தையே பந்தா உருட்டி விளையாட முடிஞ்சவர்னு... அப்ப ஒத்துக்கறேன். மகான்கள் முன்னால விஞ்ஞான கண்டு பிடிப்பெல்லாம் ரொம்ப அல்பம்னு... நம்ம பத்திரிகையிலையும் ஆன்மிக கட்டுரைகள் தேடல்களுக்கு இடம் ஒதுக்கிட்டேறேன்.''

வீரபாரதி ஏதோ ஒரு வழியாக முடிவுக்கு வந்து விட்டார் போல பேசினார். ஸ்ரீநாத் கை கூப்பி பிரார்த்தித்துக் கொண்டான்.

'ச.ப... உங்களை நான் நம்புகிறேன். என் எடிட்டர் இப்பொழுதுதான் வழிக்கு வந்திருக்கிறார். அவரை இதில் நிரந்தப்படுத்த உங்கள் கருணை வேண்டும். செய்யுங்கள்.

ஜான்சனுக்கு திரும்ப உயிர் தந்தமைக்கு உங்களுக்கு என் நன்றி.'

"என்ன ஸ்ரீ... உன் கடவுள் மனிதர்கிட்ட பிரார்த்தனையா?"

"ஆமாம் சார்... இது நடக்கறதுலதானே சார் என்னோட எடிட்டர் பதவியும் இருக்கு?"

வீரபாரதி சிரித்து விட்டார்.

"நீ பெரிய ஆள்தான்பா... உன் குடுமி சும்மா ஆடலை. காரணத்தோடதான் ஆடுது..." சொன்னபடி வெளியே பார்த்தார். இருட்டிக் கொண்டிருந்தது.

"ஏம்பா அச்சுதா... இந்த நேரத்துல போய் பாடிய தேடினா கிடைக்குமா..." ஸ்ரீநாத் நம்பிக்கை இழக்காதபடி கேட்டான்.

"அதெல்லாம் கிடைக்கும். பெட்ரோமாக்ஸ், டார்ச் எல்லாம் எடுத்துப் போகலாம். முன்னே நாராயணன் நம்பூதிரியை கண்டும் பேசணும்."

"எதுக்கு?"

"எதுக்கா? வல்லிய ஒரு மனுஷர் அவர். மகாஞானி கண்டு நோக்கிட்டு பின்ன சொல்லுங்கள்."

"அச்சுதா... நேரமாகப் போகுதப்பா..."

"சாரே... எந்தா இது? கேரளம் வந்து மகா புருஷரை காணாது போவது நல்லதில்ல அவரும் ஒரு மாந்திரீக தாந்திரீகராக்கும். ஜஸ்ட் ஒரு பதினஞ்சு நிமிஷம்..."

அச்சுதன் விடவில்லை. அவன் விருப்பப்படியே கார் அந்த இரவுப் போதில் மலைநாட்டின் எல்லையைக் கடந்து உள் பாகத்தில் அசுர வேகம் எடுத்தபடியே போய்



அதிகாலை வேளையாக நாராயணன் நம்பூதிரியின் வனத்திலும் நுழைந்து நின்றது.

பேசிக் கொண்டும் தூங்கிக் கொண்டும் வந்த களைப்போடு முழிப்புதட்டி கதவைத் திறந்து கொண்டு மூவரும் இறங்குகின்றனர்.

நல்ல பனிப்பொழில்.

காதுமடலில் ஜில்லிப்பு பிடித்து திருகிற்று.

உஸ்ஸ்' என்று ஸ்ரீநாத் சிலிர்த்துக்கொண்டான்.

சுற்றிலும் மரக் கூட்டம் நடுவே லேசாய் வெளிச்சம் பட்டுத் தெரியும் தடாகம் போன்ற ஒரு நீர்த் தேக்கம். அதில் நீரலைகள் அசைவுகள் சலசல சப்தம். கூடவே ஒரு குரல்.

"யாரானு அவ்விட...?' நம்பூதிரியின் குரல் அது. அச்சுதன் புரிந்து கொண்டு பதில் சொன்னான்.

"நம்பூதிரி... நான் அச்சுதன்..."

"எந்தா இது... ஈ வேளையில்?" அவர் கேள்வியோடு எழுந்து ஈரவஸ்த்ரத்துடன் நடந்து வந்தார். தடாகக் கரைமேல் ஒரு ஓரமாக சின்னதாக ஒரு தூமாட்டி தீப விளக்கு. எடுத்து கை அக்குளில் பிடித்துக் கொண்டால் முன்னே தொங்கியபடி ஒளியைக் கொட்டும்.

அதையும் எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி வந்தார் நம்பூதிரி.

உடம்பில் துளிகூட நடுக்கமோ பதற்றமோ குளிரோ குடைச்சலோ இல்லை.

"நமஸ்காரம் நம்பூதிரி." நெருங்கிவிட்டவரை நமஸ்கரித்தான் அச்சுதன். அவர் தூமாட்டி தீப ஒளியில்

சுற்றி நிற்பவர்களை தன் பூஞ்சை விழிகளால் பார்த்தார். இனி அவனது மலையாள சம்பாஷனை நமது தமிழில்...

"நம்பூதிரி இவர் ஆசிரியர் வீரபாரதி..."

"நமஸ்காரம்!"

"நமஸ்காரம்..."-நம்பூதிரி தன் மனை நோக்கி நடையிட்டபடி சொன்னார். அச்சுதன் பின் தொடர்ந்தபடியே சொன்னான்.

"நம்பூதிரி... அந்த ஜான்சன் பொழச்சுட்டான். அவனுக்கு ஜீவன் வந்துடுச்சு. ஆனா அவன் முழிச்சி எழுந்ததும் அந்த சக்கரவர்த்தி பரந்தாமனைப் போலவே பேசினான்."

-நம்பூதிரி படி ஏறும்போது அதை கேட்டுவிட்டு நின்றார். பின் தொடர்ந்தார்.

மினுக் மினுக்கென்று அங்கங்கே உரி தீபங்கள். மிகச் சன்னமான வெளிச்சம். பிசைந்து பிடித்து நிறுத்தினது போல இருட்டு.

நம்பூதிரிக்கு நடக்கும்போது தடுமாற்றமேயில்லை. ஆனால் வீரபாரதிக்கு மிகத் தடுமாற்றமாக இருந்தது. உடன் நடக்கும் ஸ்ரீநாத்துக்கும்... குளிர்வேறு கூடவே ஊஊ என்று உதட்டைச் சூப்ப வைத்திருந்தது. நம்பூதிரி நடந்து ஒரு மேடை மேல் போய் அமர்கிறார். ஈர உடையை..மாற்றிக் கொள்ளக் கூட தோன்றவில்லை. அச்சுதன் அருகே போய் கைகட்டிக் கொண்டான். பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

"முதல்ல ச.ப' மாதிரி பேசின ஜான்சன் திரும்ப மூர்ச்சையானான். திரும்பவும் எழுந்தப்போ சகஜமா பேசினான். அவனுக்கு ச.ப.' மாதிரி பேசின ஞாபகமே துளிகூட இல்லை.



ச.ப. மாதிரி பேசினப்போ ஒரு முக்கிய விஷயம் சொன்னான்..."

-அச்சுதன் பேச்சை நிறுத்திவிட்டு நம்பூதிரியை பார்த்தான். அவர் கேட்டபடியே தன் தலை கொள்ளாத முடியை முடிச்சுப் போட்டு இடப்பக்கமா அமுக்கியபடி வைத்துக் கொண்டிருந்தார். அவன் பேச்சை நிறுத்தவும் கைகளால் சைகை காட்டி சொல் என்றார்.

அவன் தொடர்ந்தான்.

"ச.ப. இப்போ உயிரோடு இல்ல... இ கேரளத்து குடவல்லி ஆற்றில் ஸ்நானம் செய்கையில் வெள்ளம் கொண்டு போனத அறியும் தானே?"

"அந்த உடம்பு இப்போ ஆறும் கடலும் சங்கமிக்கற இடத்துல ஒரு புதர்ல இருக்கறதா சொன்னார்."

"அப்படியா?"

"அதை எடுத்து பத்ரப்படுத்தும்படி ரகசியமாயிட்டு உத்தரவு போட்டார்."

"ஓஹோ?"

"அதே ஆ பிரேதத்தை கண்டெடுக்க வேண்டி வந்திருக்கோம். இதெல்லாம் நிஜமா பொய்யான்னு காணான் வேண்டி ஆசிரியரும் இ ஸ்ரீநாத்தும் வந்திருக்காங்க."

"செரி போய் நோக்கிட்டு வா..."

"நம்பூதிரி ஆசிர்வதிக்கணும். பிரேதம் கிட்டுமோ?"

"என்ன சோதிச்சால்...?"

"இது என்ன கேள்வி நம்பூதிரி. ச.ப' பத்தி சர்வ மூலமும் தாங்கள் அறியும். அதே நான் தங்களை சோதிச்சு..."

"எ டோய்... அந்த ச.ப. விஷயம் பயங்கர கள்ளமானு... மறிச்சு ஒருவன் ஒரு உடம்பில் நுழைஞ்சு பேசுதல் அசாத்யம்."

"அப்படியானால் ஜான்சன் பேசினது..."

"அது உள் காயம்!"

"உள் காயமோ... பின்னே எப்படி ஜான்சன் ச.ப. மறிச்சு ஆத்தோட போனதை எல்லாம் அறிஞ்சு சொன்னான்."

"எல்லாம் கள்ளம். பயங்கர தற்செயல். யாரிங்கே எடிட்டர்..."

"நான் தான்..."-வீரபாரதி முன் வந்தார்.

"உங்களுக்கு எந்த சோலி இல்லியோ... சக்கரவர்த்தி பரந்தாமன் கொச்சு மந்திர தந்திரம் அறிஞ்ச ஆள். நீங்களும் சில திவசம் இங்கு தங்கி அப்யாசிச்சால் அது போல செய்யலாம். அவ்வளவே. அது ஒரு வித்தை. மனம் வாக்கு காயம் சம்பந்தப்பட்ட வித்தை. சத்தபூர்வமானது அது. மத்தபடி ச.ப.' ஒரு கயவாளி. மறிச்சு பின்னே ஜீவன் கொண்டு வருவது காலத்தில் அசாத்யம்."

-நம்பூதிரியின் விளக்கம் வீரபாரதியை நிமிர்த்தியது. நம்பூதிரிமேல் நம்பிக்கை படரவிட்டது. அச்சுதன் முகமும் ஸ்ரீநாத்தின் முகமும் மட்டும் மிகவும் மாறிப் போய்விட்டிருந்தன.

"சரி சரி நீ போய் பிரேதம் கிடைக்குதான் நோக்கிட்டுவா. அது கள்ளம். ஜான்சன் பறைஞ்சதும் பிராந்தப் பேச்சு. மகா தற்செயல்..."

-நம்பூதிரி பேசிவிட்டு எழுந்து போயே போய்விட்டார். இருளில் மூவரும் மெலிதான விளக்கொளயில் ஒருவரை



ஒருவர் பார்த்தபடி நிற்க வீரபாரதி மட்டும் தெம்புடன் சொன்னார்.

"என்ன அச்சுதன்... அந்த சக்கரவர்த்தி பத்தி உன் நம்பூதிரி ரொம்ப நல்லவிதமா சொன்னதா சொன்னே? என்ன இப்ப இப்படி சொல்றார்?"

"எனக்கும் புரியல சார்..."

"சரி சரி வா. நேரமாகுது அங்கேபோய் தேடிப் பார்ப்போம். முதல்ல ஒரு மணிக்கு செத்துப்போவான்கற விஷயம் உண்மையா பொய்யான்னு பிரட்டி எடுத்தது. இப்ப உடம்பு கிடைக்குமா, கிடைக்காதாங்கற விஷயம் உண்மையோ பொய்யோ, பிரட்டி எடுக்க ஆரம்பிச்சிருக்கு. எனிவே... எனக்கு நல்ல எக்ஸ்பீரியன்ஸ்தான்!"-வீரபாரதி பேசிக் கொண்டே தடவித் தடவி நடந்தபடி அங்கிருந்து கிளம்பினார். அவர்கள் தொடர்ந்தனர்.

## 12

'வானிலிருந்து வருவது ஒளி ஒன்று மட்டும் தான். மற்றதெல்லாம் பூமியிலேயே துளிர்த்து பூமியிலேயே முடிந்தும் விடவேண்டும் அதில் சடலம்தான் மிக ஈனமான ஒன்று. இதை மண் தின்றால் மண் சார்ந்தும் நெருப்பு தின்றால் விண் சார்ந்தும் பிறப்பும் மறுதவிப்புகளும் நிகழும். இதில் ஒரு சடலம். இது எதற்கும் உள்ளாகாமல் போகும் பட்சத்தில் அதன் பிராப்தம் மிகக் கொடியதாகும். பெரும்பாலும் மந்திர தந்திரங்களில் வித்தகர்கள் நல்லபடி மரணித்து -முக்தி நோக்குவது இல்லை.

அவர்களின் இயற்கைக்கு மாறான செயல்கள் அவர்களை தண்டித்து விடுகின்றது.'

விடிந்து விட்டது.

கிழக்கு வானில் ஒளிப்பந்தாய் ஆதித்தன்.

கேரள மலைநாடே புத்தொளியோடு தெரிகின்றது. கீச்சு வீச்சு என்ற பறவைகள் சப்தம். அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது குடவல்லி ஆறு. நிறைய இறால் மீன்கள் நீந்தும் நீரும் மழை நீரும் கலந்த ஆறு. ஓரமாய் கோரைப் புற்கள்.

அதன் மேல் கட்டு மரங்களில் கரிய மார்பு மலையாளிகள் தலைக்கு ஒரு கமுகுப் பாகை தரித்தபடி கோடு கிழிப்பது போல் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு கட்டு மரத்தில் ஸ்ரீநாத், வீரபாரதி, அச்சுதன்... கட்டு மரம் செலுத்துபவன் நீண்ட கழியால் குடவல்லி ஆற்றின் ஆழத்தை வெளிக்காட்டியபடி புதர்களை ஒட்டியே அதை அழுத்திச் செலுத்தினான்.

கட்டுமரம் கோரைப் புதர்களில் மோதித் திரும்பி உள்ளே விளக்கி எல்லாம் காண்பித்துக் கொண்டிருந்தது. அந்த மலையாளி அடிக்கடி உதட்டை பிதுக்கி,

''பிரேதம் இங்கிருந்தால் கருடன் வந்திருக்கும். இங்க எங்கேயும் இல்லை.'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தான்.

வீரபாரதிக்குள் மெல்ல குழப்பம் அடங்கி தன்னம்பிக்கை பெருக்கெடுக்கத் தொடங்கியது.

புரியாத ஒரு புதிருக்குள் புரண்டு எழுந்து குழம்பியதற்கெல்லாம் ஒரு விடிவு கிடைக்கும் போலத் தோன்றியது.



அவர்களின் தேடலை மற்ற கட்டுமரம் ஓட்டிகளும் கேள்விப்பட்டு அவர்களும் நாலாபக்கமும் புதர்களைக் குடாய்ந்தனர்.

அப்படியே கடல் முகத்துவாரம் வரை போய் கிட்டத் தட்ட மதியம் ஒரு மணி வரை அந்த தேடல் நிகழ்ந்தது. இறுதியில் பிரேதமும் இல்லை ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை என்று முடிந்தது.

''போதும்பா... இனியும் டயத்த வேஸ்ட் பண்ண நான் தயாரில்லை. ஜான்சன் பேசினது வெறும் உளறல். ஐ ஹேவ் நோ டவுட். அதே போல அந்த ஒரு மணி சாவான்னு ச.ப.' சொன்னதும் ஏதோ சித்து வேலை. அவன் பிழைச்சுட்டான் அது போது எனக்கு. நான் கடவுள் பலவடிவம் எடுத்துவருவேன். அதை பண்ணுவேன். இதை பண்ணுவேன்னு சொன்ன நபரோட உடம்பு கூட கிடைக்கல. அதை மீன்கள் எப்பவோ தின்னு ஜீரணம் பண்ணியிருக்கலாம்னுதான் நினைக்கறேன். எனிவே ஒரு சந்தர்ப்பம் கொடுத்துருந்தா உண்மை தெரிஞ்சிருக்கும்கற குற்றச்சாட்டுக்கு என்கிட்ட இனி இடமில்லை. போதும்... கிளம்புங்க. என்ன ஸ்ரீநாத் மைடியர் யங்மேன் என்ன சொல்றே இப்போ?''

''என்னத்த சார் சொல்ல? ச.ப. சொன்னது உண்மை சார். சத்யம்.''

''அப்ப எங்க உடம்பு? அவர்தானே சொன்னார், உடம்பு இங்க இருக்கறதா. சல்லடை போட்டுட்டோமே. இல்லையே...''

''அப்படின்னா...''

''கிளம்புவோம். ஆன்மிகமும் அது சார்ந்த விஷயங்களும் எப்பவும் குழப்பமாவே இருக்கணும்னு காலம் நினைக்கறப்போ நாம என்ன பண்ண முடியும்?''

ஸ்ரீநாத் பதில் பேசாமல் அவரோடு கிளம்பினான். மூவரும் காரில் ஏறி பயணித்தார்கள். நடுவில் ஒரு எஸ்.டி.டி. பூத்தை நெருங்கி ஜான்சன் உடல் நிலை பற்றி கேட்டு தெரிந்து கொண்டார் வீரபாரதி.

''சார் நான் நல்லா இருக்கேன். நீங்க எங்க சார் கேரளா பக்கம் போய்ட்டீங்க...''

''சும்மாதான். ஒரு அசைன்மென்ட்.''

''ஆமாம். அந்த ச.ப. செத்துட்டாராமே அப்படியா சார்?''

''ஆமாம்பா...''

''வேடிக்கைய பாருங்க சார். நான் செத்துடுவேன்னு சொன்ன நபர்தான் உசுரோட இல்லை. இருந்திருந்தா போய் கிழிச்சிருப்பேன்...''

''கிழிச்சதெல்லாம் போதும். ரெஸ்ட் எடு, டெம்ப்ட் ஆகாதே. நாங்க கிளம்பி வந்துகிட்டிருக்கோம்...''

''ஓ.கே. சார்...'' அவன் அங்கே தொலைபேசியை முடக்க இங்கே வீரபாரதி முடக்குகிறார்.

குளிர் நிலவும் நிலையிலும் முகத்தை ஒத்தி எடுத்துக் கொள்கிறார்.

அவர்கள் கார் கிளம்பி திரும்ப நாராயண வனத்துக்குள் நுழைகிறது.

நம்பூதிரி எதிரில் ஏமாற்றத்தோடு மூவரும் போய் நிற்கின்றனர்.

நம்பூதிரி இருந்தார். செம்பட்டு உடுத்தி குங்குமம் தரித்து பார்க்க பெண் போன்ற தோற்றத்தில். ஸ்ரீசக்ர பூஜை செய்தபடி...

''நம்பூதிரிக்கு நமஸ்காரம்'' அச்சுதன் வணங்குவது போல அவரை அழைத்தான்.

★ ★ ★

ஸ்ரீநாத் பதில் பேசாமல் அவரோடு கிளம்பினான். மூவரும் காரில் ஏறி பயணித்தார்கள். நடுவில் ஒரு எஸ்.டி.டி. பூத்தை நெருங்கி ஜான்சன் உடல் நிலை பற்றி கேட்டு தெரிந்து கொண்டார் வீரபாரதி.

''சார் நான் நல்லா இருக்கேன். நீங்க எங்க சார் கேரளா பக்கம் போய்ட்டீங்க...''

''சும்மாதான். ஒரு அசைன்மெண்ட்.''

''ஆமாம். அந்த ச.ப. செத்துட்டாராமே அப்படியா சார்?''

''ஆமாம்பா...''

''வேடிக்கைய பாருங்க சார். நான் செத்துடுவேன்னு சொன்ன நபர்தான் உசுரோட இல்லை. இருந்திருந்தா போய் கிழிச்சிருப்பேன்...''

''கிழிச்சதெல்லாம் போதும். ரெஸ்ட் எடு, டெம்ப்ட் ஆகாதே. நாங்க கிளம்பி வந்துகிட்டிருக்கோம்...''

''ஓ.கே. சார்...'' அவன் அங்கே தொலைபேசியை முடக்க இங்கே வீரபாரதி முடக்குகிறார்.

குளிர் நிலவும் நிலையிலும் முகத்தை ஒத்தி எடுத்துக் கொள்கிறார்.

அவர்கள் கார் கிளம்பி திரும்ப நாராயண வனத்துக்குள் நுழைகிறது.

நம்பூதிரி எதிரில் ஏமாற்றத்தோடு மூவரும் போய் நிற்கின்றனர்.

நம்பூதிரி இருந்தார். செம்பட்டு உடுத்தி குங்குமம் தரித்து பார்க்க பெண் போன்ற தோற்றத்தில். ஸ்ரீசக்ர பூஜை செய்தபடி....

''நம்பூதிரிக்கு நமஸ்காரம்'' அச்சுதன் வணங்குவது போல அவரை அழைத்தான்.

★ ★ ★